நவம்பர் 2010

விலை: 40/-



O/L பரீட்சைக்குத் தயாராவது எப்படி?

இளையோர் தறிகெட்டுவிட்டனரா?

சிகரம்:2 அடி:2

# சகரம்

இளையோர் மாதாந்தம்

தொடு

சிகரம் ஊடக இல்ல மாணவர் வெளியீடு




சிகரம் ஊடக இல்ல புதிய ஊடகப் பயணத் தொடக்க விழாவில்
"யாழ்ப்பாணம் இன்று" இணையதளம் அங்குரார்ப்பனம் செய்யப்பட்டபோது.....


# NATIONAL COMPUTER SYSTEMS

**Computer Sales, Computer Repairing, Netwoking, Web Designing, Software Development.**

IT Solution Made Simple

**NO : 226, MANIPAY ROAD, JAFFNA.**

Tel : 021 2221648, Mobile : 077 2222083, Fax : 021 2221648 E-mail : ncsbox@sltnet.lk

## Available

- NCS Box
- Laptop
- Ram
- MotherBoard
- USB Drives
- Printers
- Sub Woofers
- Dongle
- HeadPhone
- ADSL Routers
- Web cam
- Scanners
- CD/DVD
- Optical mouse

## Services

- Net browsing
- Net 2 phone
- Photocopy
- Laser B/W & Color Printing
- Scanning
- DVD/CD writing
- Movie DVDs sale
- Fax
- Binding
- Laminating
- Phone Cards & Reloads

PC Repair & Software Installation வீட்டிற்கு வந்து செய்து கொடுக்கப்படும்

நேற்றைய அனுபவங்களிலிருந்து
நாளைய சாதனைகளை நோக்கி

# சிகரம் தொடு
SIKARAM THODU

சிகரம் 2 அடி 2

சிகரம் ஊடக இல்லம்
மாணவர் வெளியீடு

**தொகுப்பு**
கோ.றுஷாங்கன்

**இணைத் தொகுப்பு**
ம. யசோநிதி

**வடிவமைப்பு**
அல்பேர்ட் பெஸ்ரியன்

**ஆக்கங்கள்**
ஞா. கிரிஷாந்
கி. கிருத்திகா
ம. யசோநிதி
செ. கார்த்திகா
ம. சுஜீவன்
ஆ. சிந்துஜா
மகேஸ்வரன் பிரசாத்
அல்பேர்ட் பெஸ்ரியன்
ந.சதீஸ்
சு.நேதாஜி
ஜெயந்தி சிதம்பரப்பிள்ளை

**அச்சாக்கம்:**
கரிகணன் பிறின்டேர்ஸ்

**சந்தா விபரம்**
ஆண்டு சந்தா: 600 ரூபா
2 ஆண்டு சந்தா: 1,000 ரூபா
மாணவர்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும்
ஆண்டு சந்தா: 500 ரூபா

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**சிகரம் ஊடக இல்லம்**
இல. 221, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி : 077 77 33 931
மின்னஞ்சல்:
sikaramthodu@gmail.com

# உள்ளே...

2 புதிய ஊடகப் பயணம்

இளைஞர்கள் தறிகெட்டுப் போவதா? 4

தொழில்வாய்ப்புக்கு ஊடகக் கற்கைகள் 8

10 O/L பரீட்சைக்குத் தயாராவது எப்படி?

எந்திரனின் தந்திரம் 16

24 மணி அடிக்காத தபால்காரன்

36 குறை ஒன்றும் இல்லை

### இன்னும்....

யாழ்ப்பாணத்தில் புதிய தொலைக்காட்சி.......... 07
O/L உடன் தொழில்வாய்ப்பு.......... 14
அழகே உன்னை ஆராதிக்கிறேன்.......... 31
ஓடி விளையாடு பாப்பா.......... 34
மொழியோடு விளையாடு.......... 38
விளையாட்டில் கலக்கும் பல்கலைக்கழகம்.......... 40
வரம் தரும் வங்கிகள்.......... 42
வாகன அனுமதிப்பத்திரம்.......... 45
வர்த்தக வெற்றி வழிகாட்டி.......... 46

நிஜ எந்திரனின் ஆட்டம்
கணினி அழப்படைகள்
மணி அழக்காத தபால்காரன்
கணினி கேள்வி – பதில்
மைக்ரோசொஃப்ட் வேர்டில் ஆவணம் தயாரித்தல்
**Photoshop** இல் **Photo** எடிட்டிங்
பொன்தமிழ் மென்பொருள்கள்
புது வரவு

# தராதரம்

30 வருடங்களுக்கு மேலாக, வரையறுக்கப்பட்ட வளங்களுடன், மூடுண்டிருந்த நமது சூழலில், எதிலுமே தராதரத்தை எதிர்பார்க்க முடிந்திருக்கவில்லை.

வெளித் தொடர்புகள் இன்றி, நவீன தொழில்நுட்பத்தின் வாசனையையே நுகர முடியாமல் இருந்த அந்தச் சூழலில், ஏதோ கிடைத்தவற்றுடன் திருப்திப்பட்டுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமே இருந்தது.

ஆனால், அந்த நிலை போய், உலகின் அத்தனை புது அம்சங்களையும் அனுபவிக்கும் வரம் இப்போது எமக்குக் கிட்டியிருக்கிறது.

இந்தப் புதிய சூழலில், அரிசி, மா, சீனி முதற்கொண்டு நவீன இலத்திரனியல் சாதனங்கள் வரையில் அனைத்திலும் மிகப்பிந்திய தரத்தை இப்போது பெற்றுக்கொள்ள முடியும்.

உலக சந்தையில் நேற்றுத்தான் வெளியான மிகப்பிந்திய கையடக்கத் தொலைபேசியையோ, டிஜிட்டல் கமராவையோ, கணினி வகைகளையோ இன்றே எம்மண்ணில் பெறும் வாய்ப்பு வந்தபின், சாதாரணங்களுடன் சமரசம் செய்யவேண்டிய எந்த நிர்ப்பந்தமும் எமக்குக் கிடையாது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு மிக அவசியமான ஊடகங்களுக்கும் இது பொருந்தும்.

வன்முறைகளும், அவலங்களும், அரசியலுமே நாளாந்த யதார்த்தம் என்ற நிலை மாறி, சாதாரண வாழ்வு அனைவருக்கும் கைகூடப்பெற்றிருக்கும் புதிய சூழலில், எமது சமூகத்தை உலகத்தரத்துக்கு வளர்த்துச்செல்லும் தராதரத்தை ஊடகங்கள் கொண்டிருக்கவேண்டும்.

இன்னும் உழுத்துப்போன பழைய பல்லவிகளையே இழுத்துவிட்டு வியாபாரம் செய்யும் உத்திகளைக் கைவிட்டு, இன்றைய சமூகத்தின் அனைத்து எதிர்பார்ப்புக்களையும் பூர்த்திசெய்யும் கடப்பாட்டை ஊடகங்கள் நிறைவேற்ற-வேண்டும்.

இனி எங்கும் தரம். எதிலும் தராதரம். அதுவே நம் தாரக மந்திரமாக இருக்கவேண்டும்.

அப்போதுதான், 30 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும் எமது வாழ்வை, இன்றைய நவீன உலகத்தரத்துக்கு விரைவாகக் கொண்டு செல்ல முடியும்.

கொடுக்கும் பணத்துக்கு தரத்தை எதிர்பார்ப்பதில் என்ன தவறிருக்கிறது?

ஊடகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

மாணவர்களுடன் இணைந்து

கோ.றுஷாங்கன்

# சிகரம்

தமிழ் ஊடகச் சூழலில், தொழில்முறை தராதரங்களை வளர்த்தெடுக்கும் நோக்குடன், 'சிகரம் தொடு' இளையோர் மாதாந்த சஞ்சிகை மற்றும் யாழ்ப்பாணம் இன்று (www.JaffnaToday.com) இணைய ஊடகம் என்பன சிகரம் ஊடக இல்ல மாணவர்களின் முயற்சியாக ஒக்டோபர் 2ம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட்டன.

'நேற்றைய அனுபவங்களிலிருந்து, நாளைய சாதனைகளை நோக்கிய புதிய ஊடகப் பயணம்' ஒன்றின் தொடக்கமாக மாணவர்களது இந்த முயற்சி அமைந்திருந்தது.

"வழமைக்கு மாறானவையே செய்தியாகிறது என்று ஒரு ஊடக விதிமுறை உண்டு. ஆனால், மூன்று தசாப்த காலப் போர்ச் சூழலில், இங்கே எல்லாமே வழமைக்கு மாறானவையாகி, சீர்குலைந்துபோயுள்ளன. இந்தச் சூழலில், படிப்படியாக ஏற்பட்டுவரும் வழமை நிலையும், வளர்ந்துவரும் இயல்புச் சூழலுமே பிரதானமாகச் செய்திக் கவனத்தைப் பெறவேண்டும்" என்று, புதிய ஊடகப் பயணத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சிகரம் ஊடக இல்லப் பணிப்பாளரும், பிரதான பயிற்றுவிப்பாளருமான கோ.றுஷாங்கன் தெரிவித்தார்.

இந்தக் கருத்தை ஆதரிக்கும் விதமாக, ஊடகங்கள் நேர் சிந்தனையில் பணியாற்றவேண்டும்

# புதிய ஊடகப் பயணம்

## சஞ்சிகை - இணையத்தளம் அங்குரார்ப்பனம்

என்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வலியுறுத்தினார்.

"ஒரு குவளையில் கால்வாசி நீர் இருந்தால், அதற்குள் கால்வாசி நீர் இருக்கிறது என்றும் சொல்லலாம். முக்கால்வாசிக்கு நீர் இல்லை என்றும் சொல்லலாம். ஆனால், குவளையில் இருப்பதைச் சொல்வதே நேர் சிந்தனை. இல்லாததைத் தூக்கிப் பிடிப்பதல்ல" என்று கூறிய பேராசிரியர் நா.சண்முகலிங்கன், இதேபோன்றே, ஊடகங்களும் நேர்சிந்தனையில் செய்திகளை வெளியிடுவது அவசியம் என்றார்.

இரசனை இல்லாமல் போனதாலேயே எதிர்மறை சிந்தனைப் போக்கு வளர்கிறது என்று கூறிய அவர், வாசிப்பும், சிந்திக்கும் திறனும் குறைந்து வருவதே இதற்குக் காரணம் என்று சொன்னார். "இவ்வாறான சூழலில், ஊடகத்துறை ஒரு கற்கைநெறியாக வளர்ந்து வருவது வரவேற்கத்தக்கது" என்றார் அவர்.

"பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பவர்கள் அதன் பின் சுயமாக ஒரு தொழிலைச் செய்யத் தயக்கம் காட்டுகிறார்கள். ஆனால், எமது பல்கலைக்கழகத்தில் நாடகமும், அரங்கியலும் விசேட பட்டப்படிப்பை நிறைவுசெய்து முதலாம் பிரிவில் சித்தியெய்திய றுஷாங்கன், ஒரு சுயதொழில் முயற்சியாக இந்த ஊடகக் கல்லூரியை ஆரம்பித்திருப்பது பாராட்டுக்குரியது" என்று, சிகரம் ஊடக இல்ல முயற்சியையும், மாணவர்களின் உற்சாகத்தையும் அவர் பாராட்டினார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, நல்லவற்றை விடுத்துத் தீயவற்றை விதைக்கும் பத்திரிகைத் தர்மம் மாறவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

செய்தி அளிக்கை முறையில் ஊடகத் தராதரங்கள் சரியாகப் பேணப்பட்டால், பக்கச்சார்பு, நடுநிலை என்ற பிரச்சினைகளெல்லாம் எழாது என்ற ஊடக இல்லப் பணிப்பாளரின் கருத்தை வரவேற்று உரையாற்றிய, நிகழ்வின் பிரதம விருந்தினர், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,



"ஊடகங்கள் அவற்றை இயக்குபவர்களின் நோக்கங்களை நிறைவேற்றுபவையாகச் செயற்பட்ட நிலை மாறி, மக்களுக்குச் சேவையாற்றுவதை தமது பிரதான இலக்காகக் கொள்ளவேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்வில், சிகரம் ஊடக இல்லத்தில் மூன்று மாத கற்கைநெறியையும், இரண்டு மாத பணியிடப் பயிற்சியையும் நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. வயலின் இசைக் கலைஞர் அ.ஜெயராமனின் வயலின் சோலோ நிகழ்ச்சியும் இறுதியாக நடைபெற்றது.

# இளைஞர்கள் தறிகெட்டுப் போனரா?

குறி சுடுவது எந்தளவு நியாயம்? சுலபமாகச் சீரழிந்து போகும் அளவுக்கு யாழ்ப்பாணக் கலாசாரம் அவ்வளவு பலவீனமான ஒன்றா?

'யாழ்ப்பாணத்தில் கலாசாரம் சீரழிந்து வருகிறது', 'இளைஞர்கள் தறிகெட்டுவிட்டார்கள்' என்றவிதமான குற்றச்சாட்டுக்கள் அண்மைக்காலமாக உரத்து ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

அதுவும், இயல்புச் சூழ்நிலை திரும்பி, ஏ9 பாதையூடான போக்குவரத்துக்கள் சுமுகமான பின்னர்தான் இது அதிகரித்திருப்பதாக பரவலாக ஊடகங்களிலும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து நடத்தப்படும் சில இணையத்தளங்கள் இன்னும் ஒருபடி மேலே போய், இணையசேவை மையங்களில் மாணவர்கள் சீர்கெடுவதாகவும், யாழ் நகரில் ஆண், பெண்கள் தவறான நடத்தைகளில் ஈடுபடுவதாகவும் ஆதாரமற்ற காணொளிகளை வெளியிடுகின்றன

இன்றைய இளைஞர்கள் தமது இளமைக் காலம் முழுவதையும் போர்ச் சூழலிலேயே கழித்தவர்கள்.

ரயில் வண்டியையே காணாமல், நவீன வசதிகள் எதனையும் அனுபவிக்காமலே வாழ்ந்துவிட்டவர்கள்.

புதிய சூழலில், ஏராளமான வசதிகளை அனுபவிக்கக் கிடைத்ததில் திழைத்திருக்கும் இவர்கள், சிலவேளைகளில் திசைமாறியிருந்தாலும், அதற்கு அவர்கள் காரணம் என்பதைவிட, இத்தனை காலமும் இருண்ட சூழ்நிலைக்குள் வைத்திருந்த நிலைமைகள்தான் காரணமாகிறது. திடீரெனத் தமக்குக் கிடைத்திருக்கும் பல்வேறுபட்ட வாய்ப்புக்களையும் அனுபவிக்கத் துடிக்கும் அவர்களை, கலாசார சீர்கேட்டின் அடையாளங்களாகக்

இந்தக் கேள்விகள் மனதைக் குடைய, துறைசார்ந்த நிபுணர்கள் சிலரிடம் இதுபற்றிக் கேட்டேன்.

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் கடமையாற்றும் உளவளத்துணை ஒருங்கிணைப் பாளரான வைத்திய கலாநிதி திருமதி.பு.ஜீவானந்தம் நிலைமையை இவ்வாறு விளக்கினார்.

"இளைஞர்கள் அப்படியொன்றும் தறிகெட்டுப்போய்விடவில்லை. அவர்களைக் குற்றவாளிகள் என்று சொன்னால், உண்மையில் அவர்களை வழிநடத்துபவர்கள் தான் குற்றவாளிகளாவார்கள்" என்று சொன்ன அவர்,

"இன்று இங்கே கிடைக்கும் பலவும் நமது இளைஞர்களுக் குப் புதியவை. நீண்ட காலத்துக்குப் பின்னர்



தளர்வான சூழலில் பலவித வசதிகளை அறிமுகப்படுத்தும் போது அது பற்றிய நன்மை தீமைகளை எடுத்துரைப்பார் யாருமில்லை. இதனால், எதையும் பரிச்சயப்படுத்திப் பார்க்கும் வயதுடைய இளைஞர்கள், இன்றைய சமுதாயத்தின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப்படுவதனாலும், அவர்களின் உணர்வுகளை கையாளப் போதியளவு அறிவு இல்லாமையினாலும் சில முரண்பாடான பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள்'' என்று மேலும் விளக்கினார்.

இதேமாதிரியான பதிலைத்தான் பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தின் (RDHS), உளவள ஆலோசகர் (Psychiatrist social worker) திரு.S.இரவீந்திரன் என்பவரும் கூறினார்.

“பெரியவர்கள் நாளாந்தம் காட்டிக்கொடுக்கும் விடயங்கள் இளைஞர்களை ஈர்க்கக்கூடிய வகையிலுள்ளபோது அதை அவர்கள் செய்ய முயல்கிறார்கள்'' என்கிறார் அவர்.

ஆனாலும், மதுவுக்கும், போதைக்கும் அடிமையாவதும், வீதிகளில் பெண்களுடன் சேஸ்டை புரிவதும், பெண்பிள்ளைகள் திருமணமாகாமலே கருவுறுவதும், பெற்றெடுத்த குழந்தைகளைத் தூக்கியெறிவதும் என நீண்டுசெல்லும் பிரச்சினைகளை அப்போ என்னவென்பது?
ஏன் இளைஞர்கள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? என்று கேட்டபோது,

“பொதுவாகவே இளைஞர்களுக்கு அவர்களது பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய பெரியவர்களுடனான உளவள ஊடாட்டம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இந்த நிலையில், தமது பிரச்சினைகள், சந்தேகங்களை இளைஞர்கள் பெரியவர்களிடம் சொல்லவோ, கேட்கவோ தயங்குகிறார்கள். அதுமட்டுமன்றி, பெரியவர்களும் முன்னெச்சரிக்கையாக எதையும் உணர்த்துவதில்லை. இந்த இடைவெளியே இளைஞர்கள் இவ்வாறு நடந்துகொள்ளக் காரணமாக அமைந்துவிடுகிறது'' என்றார் திருமதி ஜீவானந்தம்.

இளைஞர்களுக்கு சமூக விழுமியக் கல்வி கற்பிக்கப்படாமைதான் இதற்கு காரணம் என்று கூறும் திரு. ரவீந்திரன், பெற்றோர் முதல் சமூக நிறுவனங்கள் வரை, இளைஞர்களுக்கு விழுமியக் கல்வியை ஊட்டத் தவறுகிறார்கள் என்கிறார்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இருக்கவேண்டிய உறவு முறையையும் அவர் தெளிவாக விளக்கினார்.

13 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் பெற்றோரை சார்ந்து வாழ்பவர்கள்(Dependent Children). இவர்களுக்கு இந்த வயதிலேயே அடிப்படை சமூக விழுமியக் கல்வியுடன், தமது முழுக் கட்டுப்பாடுகளையும் பெற்றோர் கொடுக்க முடியும்.

13-20 வயதுக்கிடைப்பட்ட சுதந்திரமான வாழ்க்கையை விரும்பும் பிள்ளைகளுக்கு (Independent Children) பெற்றோர் அளவுக்கதிகமான கண்டிப்பு, விமர்சனங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைத் திணிக்கும்போது பிள்ளைகள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஒரு சிலர் முறை தவறவும் கூடும்.

அடுத்தபடியாக 20-25 வயது. இது இன்னொருவருடன் தங்கி வாழப் பழகும் (Inter Dependent) பருவமாக இருக்கிறது. பல்கலைக்கழக மாணவர்களாக இருந்தாலும் சரி, திருமணமானவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் இன்னொருவருடன் சார்ந்திருக்க விளைவர். இங்கும் சரியான

புரிந்துணர்வு மற்றும் தன்னிச்சையான முடிவுகளுக்கு இடமளிக்கப்படும் பட்சத்தில் தவறான செயல்கள் நடக்க வாய்ப்பில்லை.

எல்லா விடயங்களிலும் தலையிடுதல், விமர்சிப்பு, கண்டனங்கள், குறைகளை பெரிதளவில் வெளிப்படுத்தல் போன்ற அணுகுமுறைகளைப் பெற்றோர் கடைப்பிடித்தால் நிலைமை மோசமடையும். இதன்போது, பெற்றோர் மறைமுகமாக பிள்ளைகளின் முடிவுகளுக்குத் தடையாக நிற்கின்றனர். இதனால் “செய்யலாமா? இல்லையா?” என்ற குழப்பம் மற்றும் கேட்பதில் தயக்கம் என்பவற்றால் பிள்ளைகள் வழிமாறுகிறார்கள்.

சமூக நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளும் சரியான வாழ்வியல் பற்றிய விடயங்களை, சமூக விழுமியங்களை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தவறுவதாலும் இத்தகைய பிரச்சினைகள் எழுகின்றன என்று கூறும் இரவீந்திரன், இதற்கு சமூகம் தான் பொறுப்பேற்கவேண்டும் என்று வாதிடுகின்றார்.

சரி, தம்மீதான இத்தகைய குற்றச்சாட்டுக்கள் குறித்து இளைஞர்கள் என்ன செய்யவேண்டும் என்று திருமதி. ஜீவானந்தத்திடம் கேட்டேன்.

பெற்றோரின் தேவைகள் என்ன? அவர்கள் எம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்கள்? என்பவற்றை இளைஞர்கள் புரிந்துகொள்ளவேண்டும். பெரியவர்கள் சொல்லும் விடயங்களைச் செவிமடுத்தல், எந்த ஒரு புதிய விடயத்தையும் பெரியவர்களுடன் நட்புடன் கேட்டு விளக்கம் பெறல் என்பன அவசியமாகும்.

வீட்டுக்கு மறைத்துச் செய்ய முயலும் விடயங்கள் பற்றி, அவற்றைச் செய்ய முன்னரே, அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை தெரிந்து கொள்ளவேண்டும்.

முக்கியமாக, பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார விடயங்களை முறையாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார் வைத்திய கலாநிதி.திருமதி.ஜீவானந்தம்.

அதேவேளை, பெற்றோர் பிள்ளைகளைப் புரிந்து நடப்பவர்களாக இருப்பதுடன், கவனிப்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும்,

பாடசாலைகளில் மாணவர்களுக்கு உளவள ஆலோசனை வழங்குதல், இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய விளக்கத்தை அவர்களுக்குத் தெளிவுபடுத்துதல் என்பனவும் அவசியமாகும் என்கிறார் அவர்.

“இதற்காகச் சட்டத்தில் கூட சிறு மாற்றம் ஏற்படின் அது பாதிக்கப்பட்ட இளைஞர்களின் எதிர்காலத்துக்கு நல்லது. குறிப்பாக, பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளான சிறு பிள்ளைகள் கருக்கலைப்புச் செய்ய அனுமதிப்பதுடன், புறம்பாக மனமொத்து முறையற்ற கர்ப்பமாகும் பிள்ளைகளுக்கு இது பொருந்தாது என்று சட்டத்திருத்தம் கொண்டுவரலாம்” என்கிறார் திருமதி. ஜீவானந்தம்.

நிலைமையைச் சீராக்க பெற்றோரும், பிள்ளைகளும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு விளக்குகிறார் இரவீந்திரன்.

“பெற்றோர் பிள்ளைகள் மேல் நம்பிக்கையுடன், அன்பு (Authoritative & Love) காட்டி வளர்க்க வேண்டும். இது கடினமானதெனினும், இதுவே சரியான வளர்ப்பு முறையாகும். பிள்ளைகளுடைய தலைமைத்துவப் பண்பை வளர்த்து, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் அவர்களுடைய கடமை - பொறுப்புகளை உணர்த்தவேண்டும்” என்று கூறும் அவர், பாலியல் கல்வியை விரசத்தோடு பார்க்காது, அறிவு புகட்டவேண்டும் எனச் சொன்னார்.

இவற்றைச் சமுதாயம் உறுதிப்படுத்துமானால், இளைஞர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நீங்க வழியேற்படும்.

நிலைமையைச் சீர்செய்யாமல் மேலெழுந்தவாரியாக இளைஞர்களைக் குற்றஞ்சாட்டுபவர்கள், தாமே இளைஞர்களின் இந்த நிலைமைக்குக் காரணமாகிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும் என்கிறார் அவர். ■

**– ம.யசோநிதி**

# யாழ் மக்களுக்கு தீபாவளி பரிசு

## டொல்ஃபின் டிஜிடல் தொலைக்காட்சி

டொல்ஃபின் ரிவி என்ற பெயரில், புதிய டிஜிட்டல் தொலைக்காட்சி சேவையொன்று இந்தத் தீபாவளி முதல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் செயற்படும் கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்களூடாக இந்த டிஜிட்டல் தொலைக்காட்சி சேவையையும் மக்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலும், கொழும்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளிலும் தொலைக்காட்சி சேவையை வழங்கிவரும் டான் தொலைக்காட்சிக் குழுமத்தினரும், இலங்கையிலும், வெளிநாடுகளிலும் தொலைக்காட்சி சேவையை வழங்கிவரும் ரிவி லங்கா தொலைக்காட்சிக் குழுமத்தினரும் இணைந்து, இலங்கையிலேயே முதல் தடவையாக, டிஜிடல் தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த டொல்ஃபின் தொலைக்காட்சி சேவையை யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தியள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள 91 கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்களின் ஒன்றியம், டென் ஸ்ரார் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்தினூடாக, இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் அனுமதியுடன், சட்டரீதியாக இந்தத் தொலைக்காட்சி

சேவையை வழங்குவார்கள் என்று, டென் ஸ்ரார் நிறுவனப் பணிப்பாளரும், கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர் சங்கத்தின் செயலாளருமான ரி.இந்திரகுமார் தெரிவித்தார்.

டொல்ஃபின் தொலைக்காட்சி என்ற இந்த டிஜிட்டல் தொலைக்காட்சி சேவையூடாக 37 தொலைக்காட்சி அலைவரிசை களை மக்கள் பார்வையிட முடியும்.

இந்தச் சேவையை சாதாரண அன்ரனாக்கள் மூலமே மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும், இது டிஜிட்டல் தொலைக்காட்சி சேவை என்பதால், இங்கு பாவனையிலிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகளில் இதைப் பார்வையிடுவதற்கு டொல்பின் டிஜிடல் தொழில்நுட்பக் கருவியொன்றை அன்ரனாவுடன் இணைக்க வேண்டியிருக்கும். இதன் விலை 6,000 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கேபிள் இணைப்பு பாவிப்போருக்கு இந்தக் கருவி தேவைப்படாது. மற்றும் LCD, LED தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்போர் இந்தக் கருவியில்லாமலே நேரடியாக அன்ரெனா மூலம் டொல்பின் டிஜிடல் தொலைக்காட்சி சேவையைப் பயன்படுத்த முடியும்.

### இலவசமாக கல்வி ரிவி:

டொல்ஃபின் தொலைக்காட்சி சேவையினூடாக கல்வி ரிவி என்ற பெயரிலான விசேட இலவச கல்விச் சேவையொன்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் ஒரு அலைவரிசையே இதற்கென ஒதுக்கப்பட்டாலும், எதிர்காலத்தில் இரண்டு அலைவரிசைகளை இலவச கல்விச் சேவைக்காக ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் டான் ரிவி பணிப்பாள் குகநாதன் கூறுகிறார்.

ஒரு காலத்தில் மிகவும் உயர்வாக இருந்த யாழ்ப்பாணத்தின் கல்வித் தரத்தை மீண்டும் அதே நிலைக்கு உயர்த்தும் நோக்குடன் இந்தக் கல்வி ரிவி என்ற இலவச தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்திருப்பதாக டான் ரிவி பணிப்பாளர் குகநாதன் குறிப்பிட்டார்.

தீபாவளி தினத்திலிருந்து செயற்படத் தொடங்கியிருக்கும் இந்தக் கல்வி ரிவியில், யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களின் பாடவிதான ரீதியான கல்வி ஒளிபரப்புக்களும், மாணவர் கல்வி விருத்திக்கான பல்வேறுபட்ட வித்தியாசமான கல்வி நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

# தொழில்வாய்ப்புக்கு உத்தரவாதமான
# ஊடகக் கற்கைகள்

தொடர்பாடல் (Public Relations), விளம்பரத்துறை (Advertising), ஊடகவியல் (Media) என, இன்னும் ஏராளமான துறைகளில் வேலைவாய்ப்புக்கள் இப்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றன.

ஆனால், பெருகிக் கிடக்கும் இந்தத் தொழில் துறைகளைக் கைப்பற்றுவதற்கு, நாம் என்ன படித்திருக்கிறோம் என்ற அறிவைவிட (Knowledge), தொழில்சார் திறன்கள்(Professional Skills), பயிற்சி (Training), அனுபவம் (Experience) என்பனவே முக்கியமாக எதிர்பார்க்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு வேலைவாய்ப்புக்கள் பெருகியுள்ள துறைகளில் ஊடகத்துறை பிரதானமானது. பிராந்தியப் பத்திரிகைகள் அதிகம் வெளியாகிவரும் யாழ்ப்பாணத்தில், இப்போது தேசியப் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், இணையத்தளங்கள் எல்லாம் தமது செல்வாக்கை விரிவுபடுத்தி வருகின்றன. எதிர்வரும் காலங்களில் ஊடகத்துறைச் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் இன்னுமின்னும் அதிகரிக்கவே செய்யும். இதனால், ஊடகத்துறை சார்ந்த வேலைவாய்ப்புக்கள் இனிவரும் காலங்களில் இன்னுமின்னும் பெருகும். ஆனால், இந்த வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு, முன்னர் போலன்றி, இப்போது ஊடகத்துறைசார்ந்த திறன், பயிற்சி, அனுபவம் என்பன அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

ஊடகத்துறையில் பொதுவாக பின்வரும் திறன்கள் அதிகம் எதிர்பார்க்கப்படும்:

### ஊடகவியல் திறன்கள்

தொடர்பாடல் திறன் (Communication Skills)

செய்தி சேகரிப்பு, அறிக்கையிடல் (News Gathering & Reporting)

விவரணம் / கட்டுரையாக்கம் (Feature/Column Writing)

மொழிபெயர்ப்பு (Translation)

கணினி தட்டெழுத்து, இணையப் பயன்பாடு (Typesetting, Internet Usage)

அறிவிப்புக்கலை (Announcing)

வானொலி, தொலைக்காட்சி எழுத்துருவாக்கம் (Radio, TV Script Writing)

நிகழ்ச்சித் தயாரிப்பு (Program Production)

### தொழில்நுட்பத் திறன்கள்

பக்கவடிவமைப்பு (Page Layout)

வரைகலை அமைப்பு (Graphic Design)

இணையத்தள உருவாக்கமும் வடிவமைப்பும் (Web Development and Designing)

ஒளிப்படக்கலை (Photography)

வீடியோ படப்பிடிப்பு (Videography)

ஒலி / ஒளித்தொகுப்பு (Audio-Video Editing)

ஒளி தொழில்நுட்பம் (Lighting Techniques)

ஒலி – ஒளிபரப்பு தொழில்நுட்பம் (Broadcasting Techniques)

### மேலதிக திறன்கள்

விற்பனை ஊக்குவிப்பு (Sales Promotion)

விளம்பர சேகரிப்பு (Advertisement Canvassing)

விநியோகம் (Circulation)

சந்தைப்படுத்தல் (Marketing)

மேற்படி திறன்களையும், அதுசார்ந்த




பயிற்சியையும் பெற்றிருந்தால், ஊடகங்களில் சுமார் 25க்கும் மேற்பட்ட வகையிலான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த காலங்களைப் போலன்றி இனிவரும் காலங்களில் ஊடகத்துறையில் பணியாற்ற விரும்புவர்களிடம் தொழில்முறைத் தேர்ச்சியும், பயிற்சியும் அதிகளவில் எதிர்பார்க்கப்படும்.

இந்தத் திறன்களைக் கொண்டிருப்போர், ஊடகங்களுக்கு வெளியேயும், அரசாங்க அலுவலகங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் கம்பனிகள், அச்சகங்கள், ஸ்டூடியோக்கள் என்று ஏராளமான இடங்களில் இலகுவாக வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### அச்சு ஊடக வேலைவாய்ப்புக்கள்

பிரதேச செய்தியாளர் / தெரிவிப்பாளர் (Area Reporter)

அலுவலக செய்தியாளர்(Office Reporter)

உதவி ஆசிரியர் (Sub Editor)

செய்திஆசிரியர் / ஆசிரியர் (News Editor / Editor)

மொழிபெயர்ப்பாளர் (Translator)

ஒப்புநோக்குநர் (Proof Reader)

ஒளிப்பட ஊடகவியலாளர் (Photo Journalist)

தட்டச்சாளர் (Typsetter)

பக்க வடிவமைப்பாளர் (Layout & Graphic Designer)

விநியோகஸ்தர் (Circulation Officer)

விளம்பர சேகரிப்பாளர் (Advertisement Canvasser)

### வானொலி, தொலைக்காட்சி, இணைய வேலைவாய்ப்புக்கள்

பிரதேச செய்தியாளர் (Area Reporter)

அலுவலக செய்தியாளர் (Office Reporter)

செய்தியாசிரியர் (News Editor)

எழுத்துருவாளர் (Script Writer)

இணைய தொகுப்பாளர் (Web Editor)

இணையத்தளம் உருவாக்குபவர், வடிவமைப்பவர் (Web Developer, Designer)

அறிவிப்பாளர் (Announcer)

அளிக்கையாளர் (Presenter)

வீடியோ ஒளிப்படப்பிடிப்பாளர் (Videographer)

ஒலி-ஒளித் தொகுப்பாளர்(Audio-Video Editor)

செய்தித் தொகுப்பாளர்(News Anchors)

தொழில்நுட்பவியலாளர்(Technicians)

ஒளிநுட்பவியலாளர்(Lighting Technicians)

நடிகர்கள் (Actors)

### ஊடகங்களுக்கு வெளியே தொழில்வாய்ப்புக்கள்:

பொதுமக்கள் தொடர்பாளர் (Public Relations Officer)

வரவேற்பாளர்(Receptionist)

தொடர்பாடல் அலுவலர் (Communication Officer)

ஊடகச் செயலாளர் (Media Secretary)

நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (Project Officer)

விற்பனை ஊக்குவிப்பாளர்(Sales Promotor)

சந்தைப்படுத்தல் முகாமையாளர் (Marketing Manager)

விளம்பர சேகரிப்பாளர் (Advertising Canvasser)

யாழ்ப்பாணத்தில் விரிவாகிவரும் சில ஊடகங்கள்

**தொலைக்காட்சி**

டான் தொலைக்காட்சி
டொல்ஃபின் தொலைக்காட்சி
வசந்தம் ரிவி
நேத்ரா
சக்தி ரிவி

**பத்திரிகைகள், சஞ்சிகைகள்**

உதயன்,தினக்குரல்,வலம்புரி, தினமுரசு,சுடர் ஒளி,வீரகேசரி தினகரன்,மித்திரன்,ஜீனியஸ், விஜய்,புதுயுகம்,இசை உலகம், Daily Mirror,Sunday Times,Nation Daily News,Sunday Observer, Island

**வானொலிகள்**

யாழ் எஃப்.எம்,சக்தி எஃப்.எம். சூரியன் எஃப்.எம்,வெற்றி எஃப்.எம் வசந்தம் எஃப்.எம், இலங்கை வானொலி,இன்னும் பல ஆங்கில வானொலி அலைவரிசைகள்

**இணையத்தளங்கள்**

தமிழ் மிரர்,
அத தெரண
Jaffna Today

**பொது ஒலிபரப்பு**

யாழ் பஸ் நிலைய மணிக்குரல் ஒலிபரப்பு

– ந.சதீஸ்



**கெட் செட்**



**அமைதியான இடம்:**

திட்டம் தயாரா? முதலில் இருந்து படிப்பதற்கு அமைதியான, எவருடைய குழப்பமும் இல்லாத, காற்றோட்டமான இடம் ஒன்றைத் தெரிவுசெய்யுங்கள்.

**எழுதித் திட்டமிடுங்கள்:**

ஒரு சிறிய கொப்பியை இம்முறை பரீட்சைக்கான திட்டமிடலுக்கென்று ஒதுக்கங்கள்.

# க.பொ.த. சாதாரணதரம் பரீட்சைக்காகப் படிப்பது எப்படி?

**1.ஒன் யுவர் மார்க்!**



பரீட்சை நெருங்கிவிட்டது. எப்படியும் நல்ல பெறுபேற்றைப் பெற்றுவிடவேண்டுமென்றே எல்லோரும் விரும்புவீர்கள். ஆனாலும், இதை எப்படிச் சாதிப்பது?

இன்னும் இருக்கும் கொஞ்சக் காலத்தில், படித்து முடிக்கவேண்டியவற்றைப் படித்து, படித்தவற்றை துரிதமாக மீட்டல் செய்தாலே பரீட்சையில் வெற்றி பெறலாம்.

பரீட்சை நெருங்கிவிட்டதே என்று பதற்றப்பட்டு பல வகுப்புக்களுக்கும் அலைந்து திரிந்தீர்களானால், உடலும், மூளையும் களைப்படைந்து, படித்தது எதையுமே பரீட்சையின்போது நினைவுபடுத்த முடியாமல், வேகமாக பரீட்சை எழுத முடியாமல் சிரமப்படவேண்டிவரும்.

முதலில் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைச் சரியாக திட்டமிடுங்கள். சரியான திட்டமிடலே எந்தவொரு வெற்றிக்கும் அத்திவாரம்.

உங்கள் கற்றலை இலகுவாக்கும் நிரூபிக்கப்பட்ட வெற்றி வழிமுறைகளை இங்கே சொல்லித் தருகிறோம். இவற்றில் உங்களுக்குப் பொருத்தமான உத்திகளைத் தெரிவுசெய்து உங்களுக்கேயுரிய ஒரு திட்டத்தை வகுத்துச் செயற்படுங்கள்.

முதலில் நீங்கள் பலமாக இருக்கும் பாடங்கள், பகுதிகளையும், பலவீனமான பகுதிகளையும் இதில் பட்டியல்படுத்தி எழுதுங்கள்.

பலமான பகுதிகளை துரித மீட்டல் செய்தால் போதும். பலவீனமான பகுதிகளைச் சரியாக இனங்கண்டு, அவற்றின்மீது அதிக அக்கறை செலுத்துங்கள்.

**நாட்களை ஒதுக்குங்கள்:**

பரீட்சைக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன? இதைச் சரியாகக் கணக்கிட்டு, ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு பக்கத்தை ஒதுக்கி, இன்னும் படித்து முடிக்க வேண்டிய பாடங்கள், பகுதிகளைக் குறித்து, படிப்பதற்கான கால அட்டவணையை அமையுங்கள்.

**நேர சூசி:**

நாள் முழுக்க எல்லாப் பாடங்களையும் எடுத்துப் படித்தால் தலையைச் சுற்றும்.

1.அதிகாலை

2.முற்பகல்

3.நண்பகல்

4.மாலை

5.இரவு

என, ஒரு நாளை 5 பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு நேரத்திலும் பொருத்தமான பாடத்தைத்

தெரிவுசெய்து படியுங்கள்.

அதிகாலை, முன்னிரவு நேரங்களில் கனமான, மனப்பாடம் செய்யவேண்டிய விடயங்களைப் படிக்கலாம். உதாரணமாக, விஞ்ஞானம், வரலாறும் சமூகக்கல்வியும், ஆங்கிலம்...

மதியம், மாலை வேளைகளில் விளையாட்டாகப் படிக்கக்கூடிய பாடங்களைத் தெரிவு செய்து படிக்கலாம். உதாரணமாக, தமிழ் இலக்கியம், கணக்குப் பயிற்சி...

இதன் மூலம் மூளை களைப்படையாமல் பார்த்துக் கொள்ளலாம்.

**3.டிப்ஸ்!**

**முக்கியமானவற்றை (மட்டும்) தெரிவுசெய்யுங்கள்:**

எல்லாப் பாடங்களையும் இருக்கும் சொற்ப காலத்துக்குள் படித்து முடித்துவிடவேண்டும் என்று பதற்றப்படாதீர்கள்.

1.முக்கியமானவை

2.பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரக்கூடியவை

3.உங்களுக்கு வாலாயமான, இலகுவாகப் படித்து முடிக்கக் கூடியவை

என்று நீங்கள் கருதுபவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேகமாகப் படியுங்கள்.

**மாற்றி, மாற்றிப் படியுங்கள்:**

ஒரே பாடத்தை நீண்டநேரம் படித்துக் கொண்டிராமல், பாடங்களை மாற்றி மாற்றி படியுங்கள். கடினமான ஒரு பாடத்தை சிறிது நேரம் படித்தால், அதன் பின் இலகுவான, அதிகம் சுமையில்லாத, தமிழ் இலக்கிய பாடம் போன்ற ஒன்றைப் படியுங்கள்.

**நினைவூட்டும் அட்டைகள்:**

இது மிகவும் முக்கியமானது.

புத்தகங்களில் அல்லது பாடக்குறிப்புக்களில் உள்ளதை மீண்டும் மீண்டும் வாசித்துக்கொண்டிருக்காமல், கட்டாயம் நினைவில் வைத்திருக்க வேண்டிய விடயங்கள், சூத்திரங்கள் போன்றவற்றை உடனுக்குடன் ஒரு தாளில் அல்லது சிறிய அட்டைகளில் மிகச் சுருக்கமாக, பார்த்தவுடன் உங்களுக்கு விளங்கக்கூடிய வகையில் குறிப்பெடுங்கள்.

முக்கியமான பதங்கள், பட்டியல்கள், சூத்திரங்கள், வரைபடங்கள் என இவை அமையலாம்.

சொற்களாக மட்டுமன்றி கோடுகள், சிறிய படங்களாக குறிப்புக்களை எடுத்தால் அவை அப்படியே மனதில் ஆழமாகப் பதியும். இந்த அட்டைகளை அவ்வப்போது பார்த்து மீட்டல் செய்வதுடன், பரீட்சைக்குச் செல்லும் முன் ஒருக்கால் பார்த்துவிட்டுச்சென்றால் அப்படியே மனதில் நிற்கும்.

**கேள்வி – பதில்:**

தேவையான விடயங்களைப் படித்து விட்டால் மட்டும் போதாது. பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கேற்ற விதத்தில் சரியான விடையளித்தாலே கூடுதல் புள்ளிகள் பெறலாம்.

எனவே, படிக்கும்போதே ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்களை மனதில் எழுப்பி அவற்றுக்கான விடைகளாக விடயங்களை ஒழுங்குபடுத்திப் படியுங்கள்.

**ஓய்வு நேரங்களையும் பயன்படுத்துங்கள்:**

குறிப்புக்கள் எடுத்த அட்டைகளை ஓய்வாக இருக்கும் நேரங்களிலும் விளையாட்டாக இடையிடையே பாருங்கள். குளிக்கும்போது, சாப்பிடும்போது, பயணங்களின்போது என இதைச் செய்யலாம்.

**கூட்டுப்படிப்பு:**

தனியே இருந்து படிப்பதைவிட நண்பர்கள் சிலர் சேர்ந்து கூட்டாகப் படிப்பது நல்லது. இது உற்சாகத்தை தருவதுடன், ஒருவருக்கொருவர் உதவியாகவும் இருக்கும்.

ஒருவர் ஒரு பாடத்தில் கெட்டிக்காரர் என்றால், அவர் ஏனையோருக்கு அந்தப் பாடம் பற்றிய விடயங்களைச் சொல்லித்தரலாம்.

பல பாடங்களை மீட்கவேண்டியிருந்தால், அவற்றை உங்களுக்கிடையே பிரித்து, அவரவர் படித்துக் குறிப்பெடுத்துவிட்டு, பின்னர் ஒருவருடன் ஒருவர் பகிர்ந்து கொள்ளலாம்.

இது கடைசி நேர நேரச்சிக்கனத்திற்கு பேருதவியாக இருக்கும்.

**வாத்தியார் ஆகுங்கள்:**

படிப்பதற்கு சிறந்தவழி படிப்பித்தலே. ஒரு பாடத்தை அல்லது விடயத்தை மற்றுமொருவருக்கு கற்பிப்பதன் மூலம் அதனை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.



# பரீட்சை எழுதும்போது...

**முழுமையாக வாசியுங்கள்:**

வினாத்தாள் உங்கள் கையில் கிடைத்ததும் முழுமையாக அதை ஒரு தடவை வாசியுங்கள். வினாத்தாளில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் படியுங்கள்.



**வினா தெரிவு:**

வினாத்தெரிவு மிக முக்கியமானது. குழம்பாமல், நீங்கள் எந்தப் பகுதிகளில் கெட்டிக்காரரோ அவை தொடர்பான வினாக்களை சரியாகத் தெரிவுசெய்யுங்கள்.

**நேரத்தை திட்டமிடுங்கள்:**

வினாத்தெரிவு முடிந்ததும் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்க எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதைக் கணித்துப் பாருங்கள்.

அந்தந்த நேரத்துக்குள் குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையளித்து முடியுங்கள். ஆரம்ப வினாக்களில் அதிகளவு நேரத்தைச் செலவிட்டுவிட்டு ஏனையவற்றுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறாமல், நேரத்தை இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள்.

ஒரு வினாவுக்கு குறித்த நேரத்துக்குள் விடையளிக்க முடியாவிட்டால், அடுத்த வினாக்களை முடித்துவிட்டு, கடைசியில் அந்த வினாவைக் கவனிக்கலாம்.

**புள்ளிகள்:**

வினாத்தாளில் ஒவ்வொரு வினாக்கள், உப வினாக்களுக்குரிய புள்ளிகள் தரப்பட்டிருக்கும். அவற்றை உன்னிப்பாக அவதானித்து, அதிகளவு புள்ளிகளை ஈட்டக்கூடிய வினாக்களைத் தெரிவு செய்து பதிலளியுங்கள்.

**இலகுவானதிலிருந்து ஆரம்பியுங்கள்:**

முழு வினாத்தாளிலும் மிகவும் இலகுவான, உங்களால் சுலபமாக பதிலளிக்கக் கூடிய வினாவுக்கு முதலில் விடையளியுங்கள்.

வினா எண் ஒழுங்கில் தான் பதிலளிக்கவேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை. வினா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டால் சரி.

ஒவ்வொரு வினாவுக்குமான விடையை புதிய தாளொன்றில் எழுதுங்கள்.

**நினைவில் வருபவை:**

ஒரு வினாவுக்கு விடை அளித்துக் கொண்டிருக்கும்போது, பிறிதொரு வினாவுக்கான முக்கிய விடயங்கள் ஏதும் ஞாபகத்திற்கு வந்தால், உடனே அதை ஒரு தாளில் குறித்துக் கொள்ளுங்கள். பிறகு அதைப் பயன்படுத்திக்கொண்டு வேகமாக காரியத்தை முடித்துவிடலாம்.

**ஒவ்வொரு வினாவையும் திட்டமிடுங்கள்:**

ஒரு வினாவுக்கு விடையளிக்கும் முன், உங்களுக்கு நினைவில் வரும் விடயங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஒரு தாளில் குறித்துக் கொள்ளுங்கள்.

பின் இவற்றை என்ன ஒழுங்கில் எழுதப் போகிறீர்கள் என்று இலக்கமிட்டுக்கொண்டு, அந்த ஒழுங்கில் எழுத ஆரம்பியுங்கள்.

எழுத ஆரம்பித்த பின்னர் திடீரென நினைவுக்கு வருபவற்றையும் உடனுக்குடன் குறித்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு செய்தால் உங்கள் விடைகள் ஒரு ஒழுங்கில், சீராக அமைந்து அதிகளவு புள்ளிகளைப் பெற்றுத்தரும்.

**ஒரு வினாவையும் ஒதுக்காதீர்கள்:**

விடையளிக்கவேண்டிய எந்தவொரு வினாவுக்கும் விடையளிக்காமல் விடாதீர்கள். முடிந்தளவு அனைத்து வினாவுக்கும் விடையளியுங்கள்.

ஒரு வினாவுக்கு அதிகம் எழுதிவிட்டு, இன்னொரு

வினாவுக்கு விடையளிக்காமல் விடுவதால் புள்ளிகள் விரயமாகிவிடும். கடினமான வினா என்றாலும், உங்களுக்கு முடிந்தளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முயலுங்கள்.

**கடைசி வினா:**

பரீட்சை முடிவடைய இன்னும் 10 நிமிடங்களே உள்ளன. கடைசி வினாவுக்கு விடையளிக்கவேண்டும். இதற்கு 30 நிமிடங்கள் தேவை என்றால், பதற்றப்படாதீர்கள்.

அமைதியாக நாம் முன்னர் சொன்னதுபோல் முக்கியமான விடயங்களைக் குறிப்புக்களாகத் தயாரித்து வழங்குங்கள்.

எவ்வளவு அதிகம் எழுதுகிறீர்கள் என்பதை விட, எவ்வளவுக்கெவ்வளவு முக்கியமான விடயங்களைத் தந்துள்ளீர்கள் என்பதைப் பொறுத்தே புள்ளிகள் கிடைக்கும்.

**பாதியேனும் செய்யுங்கள்:**

ஒரு வினாவுக்கான விடை முழுமையாக தெரியாவிட்டாலும் முடிந்தளவு செய்யுங்கள். உதாரணமாக கணித பாட வினாக்களுக்கு தீர்வுகளை முடிந்தளவு செய்ய முயன்றால், இறுதி விடை கிடைக்காவிட்டாலும் செய்முறைப் படிகளுக்கான புள்ளிகளைப் பெற்றுவிடலாம்.

**தெளிவான எழுத்து:**

இது மிக முக்கியம். உருப்பாகவும், தெளிவாகவும், ஒழுங்காகவும் உங்கள் விடைகள் எழுதப்பட்டிருக்கவேண்டும். எழுத்துக்கள் விளங்காமல் ஒழுங்கின்றி இருந்தால், மதிப்பீடு செய்பவர் சினமடைந்து புள்ளிகளை இழக்கவேண்டி ஏற்படும்.

**– கோ. றுஷாங்கன்**




நம்மில் பலருக்கு ஆங்கிலச் சொற்களுக்கு தமிழ் அர்த்தம் கண்டுபிடிப்பதில் பெரும் சிக்கலாகத்தான் உள்ளது. அவசரமாக ஒரு செய்தியை நாம் ஒருவருக்கு அனுப்புவதற்காக தயார் செய்துகொண்டிருக்கும் வேளையில், சில சொற்களுக்கு அகராதியை புரட்டுபவர்கள் நம்மில் பலர் இருக்கின்றோம்.

ஆங்கிலத்தில் ஒரு மின்னஞ்சல் வந்தால் அதனுள் புரியாத ஆங்கிலச் சொற்களுக்காக அகராதியை புரட்டுவோரும் பலர் உள்ளனர்.

இனிமேல் இந்தக் கவலை இல்லை. Tamildict.com மின்னகராதி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கைகொடுக்கிறது.

இது ஒரு "Online மின்னகராதி". www.tamildict.com என்ற இணையதளத்தின் ஊடாகச் சென்று, உங்களுக்குத் தேவையான ஆங்கிலச் சொற்களுக்கான விளக்கங்களை தட்டச்சு செய்து அறிந்து கொள்ளலாம்.

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மட்டுமன்றி, தமிழ் சொற்களுக்கான ஆங்கிலப் பதங்களையும் இதில் அறிந்துகொள்ள முடியும். தமிழ் தட்டச்சுக்கென விசேட விசைப்பலகையும் இதில் உண்டு.

மேலதிக போனசாக ஜேர்மன் - தமிழ் அகராதியும் இதிலுண்டு.

இங்கு தேடும் சொற்களின் அர்த்தங்களை நாங்கள் copy செய்ய முடியாது. அந்த அர்த்தங்களை மனனம் செய்தே பிரதி எடுக்க முடியும்.




இத்தளத்திலிந்து 1000 க்கு மேற்பட்ட font களை download செய்துகெள்ளவும் முடியும்.

**Add a new word ….. or change it…**

உங்களிடம் புதிய சொற்கள் காணப்பட்டால் அவற்றை நீங்கள் இப்பகுதி மூலம் அவர்களுக்கு அறியப்படுத்தலாம். நீங்கள் கொடுக்க இருக்கும் சொல்லை இந்தத் தளத்தில் தேடிப் பாரத்து, அதில் ஏதும் பிழை இருந்தால் மாற்றம் செய்யவும் முடியம்.

Tamildict.om ஊடாக தேடிக் கிடைக்காத சொற்களை நீங்கள் google வழியினுடாக தேடல் செய்யும் வசதியும் இங்கு உண்டு..

# ஆயிரம் வாசல்

## தொழில்நுட்பக் கல்லூரி

## O/L உடன் தொழில் வாய்ப்பு

**ஹாய் நண்பர்களே....**

எங்களுக்குத் தெரியாது என்பதற்காக ஒரு விடயம் இல்லை என்று ஆகிவிடாது.

கல்விவாய்ப்பு இல்லை, தொழில்வாய்ப்பு இல்லை, அது இல்லை, இது இல்லை என்றெல்லாம் நாம் அடிக்கடி சொல்லக் காரணம், இருப்பவற்றை நாம் அறியாமல் இருப்பதுதான்.

எமக்குத் தெரியாமல் இருப்பதால், இருக்கின்ற வாய்ப்புக்கள் இல்லை என்று ஆகிவிடுமா? கிணற்றுக்கு வெளியே தவளை வரவில்லை என்பதற்காக வெளியே ஒரு உலகம் இல்லை என்றாகிவிடுமா என்ன? நம்மைச் சுற்றி நமக்காகக் காத்திருக்கும் வாய்ப்புக்களைச் சரியாக அறிந்து கொண்டு விட்டால், உண்மையில் நாமெல்லாம் அதிர்ஸ்டசாலிகள்தான் என்பதைக் கண்டுகொள்வோம்.

பல்கலைக்கழகம் தவிர உயர்கல்விக்கு வேறெந்த வாய்ப்புமே கிடையாது என்றெண்ணி வருந்துவோருக்காக, எம்மைச் சுற்றிக் கொட்டிக் கிடக்கும் கல்வி வாய்ப்புக்களை, அவற்றை வழங்கும் நிறுவனங்களை இனங்காட்டவே இந்த ஆயிரம் வாசல்.

இவ்வாறான நிறுவனங்களில் ஒன்றான திறந்த பல்கலைக்கழகம் பற்றி முன்னைய இதழில் அறிந்துகொண்டோம்.

இந்தத் தடவை, மற்றுமொரு உயர்கல்வி நிறுவனம் பற்றித் தெரிந்து கொள்வோம்.

இலங்கையிலுள்ள 38 தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒன்றான கொக்குவிலில் அமைந்துள்ள யாழ் தொழில் நுட்பக் கல்லூரிதான் அது.

இங்கு க.பொ.த சாதாரணதரச் சித்தியுடனே பல்வேறு கற்கைநெறிகளைத் தொடர முடியும் என்பது முதலாவது உற்சாகத் தகவல்.

உயர்தரம் படிக்கவில்லையே, படித்தும் மூன்று பாடங்களில் சித்திபெறவில்லையே என்ற கவலையெல்லாம் இங்கே கிடையாது.

க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தி பெற்றிருந்தால்போதும், பொருத்தமான எந்தக் கற்கைநெறியையும் தொடர்ந்து, தொழில்வாய்ப்பொன்றை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

தெரிவுசெய்யும் பாடத்தைப் பொறுத்து ஆங்கிலமும், கணிதமும் தேவைப்படும்.

எனவே, சாதாரணதரம் படித்துவிட்டு என்ன செய்வதென்று புரியாமல் இருப்பவர்களுக்கும், உயர்தரம் படித்துவிட்டு பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை என்று கவலைப்படுபவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரி சிறந்ததொரு தெரிவாகும்.

இங்கு வர்த்தகம், கணக்கியல், பொறியியல்துறை இன்னும் பல தொழிற்துறைசார் கற்கைநெறிகள்



உள்ளன. இவற்றுடன், மேலதிகமாக ஆங்கிலம் மற்றும் கணினி பிரயோகக் கற்கைகளும் நடைபெறுகின்றன.

முழுநேர கற்கைநெறியாக இருந்தால், ஒரு வருடக் கற்கையாகவும், பகுதிநேரக் கற்கைநெறியானால் இரண்டு வருடங்களைக் கொண்டதாகவும் இருக்கும். அனேகமான பாடநெறிகள் தமிழ் மொழியிலே கற்பிக்கப்படுகின்றன.

பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலேயே கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைக் கொக்குவிலில் அமைந்துள்ள கல்லூரி அலுவலகத்திலும், பிரபல புத்தகக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட முழுநேரக் கற்கைநெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, சில கற்கைநெறிகளுக்கு நாள் அடிப்படையில் குறிப்பிட்டளவு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகின்றது.

கற்கைநெறி முடிவில் ஒரு தொழில்வாய்ப்பைப் பெறுவதற்கான பயிற்சியும், வழிகாட்டலும் இங்கே வழங்கப்படுகிறது. இதனால் வேலைதேடி அலையவேண்டிய கட்டாயம் இல்லாமல் அவர்களே அந்தத் துறைசார்ந்த நிறுவனங்களில் படித்ததை பயிற்சி செய்து தொழில்வாய்ப்பொன்றைப் பெற ஏற்பாடு செய்து தருகின்றனர்.

உங்களது திறமையைப் பொறுத்து பயிற்சி வழங்கும் நிறுவனங்களே உங்களைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ளும்.

மோட்டார் வாகனம் திருத்துதல்(MVM), நீர்க்குழாய் பொருத்துதல்(Plumbing) , இலத்திரனியல்(Electronic) மற்றும் கட்டட தொழில்நுட்ப நிர்மானவியல்(BCT) போன்ற பாடநெறிகள் உடனடித் தொழில்வாய்ப்புக்கு உத்தரவாதமானவையாக உள்ளன.

வர்த்தகப்பிரிவில் கற்கைநெறியொன்றைத் தொடர்வதற்கு சாதாரணதரத்தில் கணித பாடத்தில் திறமைச் சித்தியும், தமிழ்ப் பாடச் சித்தியும் அடைந்திருத்தல்வேண்டும். கணக்கீட்டு தொழில்நுட்ப வியலாளருக்கான தேசிய சான்றிதழ்(NCAT) பாடநெறி, முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் நடைபெறுகிறது.

இவைதவிர, தட்டச்சு மற்றும் கணினியில் தேசிய சான்றிதழ்(NCST) கற்கைநெறியும், ஆங்கிலக் கற்கைநெறிகளும் இங்கே உண்டு.

பொறியியற்துறைக் கற்கைநெறிகளுக்கு, சாதாரணதரத்தில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தமிழ் உட்பட6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இந்தத் துறையில் குடிசார் எந்திரவியல் (Civil) பொறிமுறை எந்திரவியல் (ME), மின் மற்றும் இலத்திரனியல்(EE) மற்றும் தேசிய சான்றிதழ் படவரைஞர்(Draftsmanship) போன்ற பாடவிதானங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படுகின்றன.

இங்குள்ள கற்கைநெறிகள் அனைத்தும் சான்றிதழ் கற்கைநெறிகளாகவே உள்ளன. மேற்கொண்டு டிப்ளோமா மற்றும் பட்டப் படிப்புக்களை மேற்கொள்ள விரும்பினால், இரத்மலானையில் உள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியைத் தொடர்ந்து பட்டம் பெறலாம்.

தொழில் ஒன்றைச் செய்துகொண்டே மேற்படிப்பைத் தொடர்வதற்கு உகந்த ஒரு கல்வி நிறுவனமாக தொழில்நுட்பக் கல்லூரி காணப்படுகிறது.

இந்தக் கற்கைநெறிகள் தொடர்பான மேலதிக விபரங்களை கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேரில் சென்றோ, அல்லது 021-222 2358 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு அங்குள்ள கல்வி, தொழில் வழிகாட்டல் அலுவலருடன் பேசியோ அறிந்துகொள்ளலாம்.

பிறகென்ன நண்பர்களே, நீங்கள் தயார்தானே?

**– கி.கிருத்திகா**





# எந்திரன் the ROBOT இன் தந்திரம்

தமிழ்த் திரைப்பட உலகை ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறது எந்திரன். இந்தியா மட்டுமல்லாது உலகம் முழுவதும் அனைவரது அமோக வரவேற்பை அது பெற்றிருக்கிறது.

ஆசியாவிலேயே மிக அதிக பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் என்பது மட்டுமல்லாது, தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும், ஒரே நாளில், 3,000க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் பிரமாண்டமாக உலகம் முழுவதும் வெளியிடப்பட்ட முதல் இந்திய திரைப்படம் என்ற பெருமையையும் எந்திரன் தட்டிக்கொண்டுள்ளது.

வெளியான முதல் வாரத்திலேயே எந்திரனின் வசூல் 117 கோடி இந்திய ரூபாக்களைத் தாண்டிச் சாதனை படைத்தது.

காதல், சண்டை என்று போய்க்கொண்டிருக்கும் தமிழ் சினிமாவில், இரண்டையும் கலந்து எவரும் எதிர்பார்க்காத வகையில் அதை ஒரு இயந்திரத்துக்குள் - றோபோ – புகுத்தி, தமிழ் சினிமாவுக்கு புதியதொரு பரிமாணம் கொடுத்திருக்கிறார் இயக்குநர் சங்கர்.

விஞ்ஞானி ரஜினி உருவாக்கிய றோபோவான சிட்டிக்கு (அதுவும் ரஜினிதான்) மனித உணர்வுகளைக் கொடுக்கப்போய், அது அவருடைய காதலி – உலக அழகி ஐஸ்வர்யாராயையே கொத்திக்கொண்டுபோகப் பார்த்ததுதான் கதையின் அடிப்படை (டெக்னோலஜியிலை ஹொலிவுட்டை நெருங்கினாலும், கதையிலை கோட்டை விட்டிறுவமில்லை…?)

ஆனாலும், படத்தில் இறுதியில் சிட்டி (அதான் றோபோ ரஜினி உதிர்க்கும் தத்துவ வார்த்தைகள் அற்புதம். றோபோவுக்குள் தப்பான 'சிப்' நுழைக்கப்பட்டதுபோல் தான், மனித மனங்களுக்குள்ளும் பொறாமை என்கின்ற பூதம் புகுந்து நாசம் செய்கிறது என்று அசத்திவிடுகிறார்.

கதையை விடுவோம்! ரஜினியே சொல்லியிருப்பதுபோல் எந்திரனின் பலமே சங்கரின் கற்பனை – ஹொலிவுட் டெக்னோலொஜி.

தமிழுக்கு இது சாதனைதான். அதைப்பற்றிக் கொஞ்சம் பார்ப்போம்.

2001ம் ஆண்டு கமல்ஹாசன், ப்றீதி சிந்தாவுடன் இணைந்து ஷங்கர் செய்யத் திட்டமிட்டிருந்த றோபோ திரைப்படம் பத்து ஆண்டுகளின் பின்னர் இப்போது ரஜினிகாந்தின் திரைப்படமாக வெளியாகியிருக்கிறது.

அப்போது றோபோ திட்டத்துக்கு அதிக ஆதரவு கிடைக்காததால், இடையில் போய்ஸ், அந்நியன், சிவாஜி ஆகிய படங்களைச் செய்துவிட்டு, 2008இல் ரஜினியுடன் இணைந்து, சன் பிக்சேர்ஸ் வெளியீடாக எந்திரனாக அவதாரமெடுத்திருக்கிறது ஷங்கரின் றோபோ.

படங்களுக்கு தமிழ்ப் பெயர் வைத்தால் தான் வரிவிலக்கு என்ற தமிழ்நாட்டுச் சட்டத்தால், றோபோ

எந்திரன் ஆனது.

சூப்பர் ஸ்டாரின் ஸ்டைல், உலக அழகி ஐஸ்வர்யா என்ற வெற்றிச் சூத்திரங்களையெல்லாம் தாண்டி, அனிமேட்ரானிக்ஸ் என்ற புதிய தொழில்நுட்பமே எந்திரனின் வெற்றிக்குக் காரணம். இந்தியத் திரைப்படம் ஒன்றில் இந்தத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.

ரோபோ போல ஒரு உருவத்தை உருவாக்கி அதனுடைய செயற்பாடுகளை வெளியிலிருந்து இயக்கி இருக்கிறார்கள். பிரபல ஹாலிவுட் படங்களான டெர்மினேட்டர், ஜுராசிக் பார்க், அவதார், அயன்மான் போன்ற திரைப்படங்களில் பணியாற்றிய ஸ்டேன் வின்ஸ்டன் ஸ்டுடியோவினர் (Stan Winston -Studios) முதன்முதலாக இந்த இந்தியப் படத்துக்கு அனிமேட்ரானிக்ஸ் செய்துள்ளனர். ஜுரசிக் பார்க் டைனோசரின் பிறப்பிடமும், ஜேம்ஸ் கேமரூனின் அவதார் படத்தின் வேலைகள் நடந்ததும் இங்குதான்.

எந்திரன் படத்தில் வரும் ரோபோ ரஜினியின் மொடலை இங்குதான் உருவாக்கினார்கள். அதற்காக 2008 ஜுலையில் ரஜினி மற்றும் தனது குழுவுடன் லொஸ் ஏஞ்சல்சில் உள்ள இந்த ஸ்டுடியோவுக்குச் சென்றிருந்தார் சங்கர். அப்போதுதான் ரஜினியை வைத்து ரோபோ ரஜினிக்கான மொடலை உருவாக்கும் பணியை தொடங்கியிருக்கிறார்கள். மேக்கப் ஒத்திகையும் எடுக்கப்பட்டிருக்கிறது.

சுமார் ஒன்றரை வருடங்கள் இந்த ஸ்டுடியோவில் உள்ளவர்கள் ரோபோ ரஜினிக்காக உழைத்திருக்கிறார்கள். பிறகு சென்னை வந்து சன் ஸ்டுடியோவில் நான்கு மாதங்கள் இறுதிகட்ட வேலைகளை பார்த்திருக்கிறார்கள். மொத்தம் 22 காட்சிகளில் அனிமேட்ரானிக்ஸ் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

எந்திரன் படப்பிடிப்பு மற்றும் தொழில்நுட்பப் பணிகளைச் செய்து முடிக்க 873 நாட்கள் பிடித்திருக்கிறது. தொழில்நுட்பத்தின் அனைத்துச் சாத்தியக் கூறுகளையும் பயன்படுத்தும் வாய்ப்பு எந்திரன் படத்தில் இருந்ததாகவும், ஹாலிவுட் படங்களில்கூட இப்படி அமைவது அபூர்வம் எனவும் பாராட்டி இருக்கிறார்கள் ஸ்டேன் வினஸ்டன் ஸ்டுடியோவைச் சேர்ந்தவர்கள். இந்த ஸ்டுடியோ வேலை செய்திருக்கும் முதல் இந்திய திரைப்படம் எந்திரன் என்பதையும் பெருமையுடன் தனது வலைத்தளத்தில் குறிப்பிட்டிருக்கிறார் சங்கர்.

பேட்மேன், மென் இன் பிளாக் போன்ற ஹாலிவுட் படங்களுக்கு பணியாற்றிய மேரிவாட் என்னும் உலகப் புகழ்பெற்ற ஒப்பனைக் கலைஞர், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்காக விசேட வேட உடைகளை உருவாக்கி இருக்கிறார். றோபோ ரஜனியான சிட்டியின் தோற்றத்துக்காக, எ.்.குத் தோற்றம் கொண்ட பாரமான விசேட ஆடையையும், கடுமையான முக ஒப்பனையையும் நடிகர் ரஜனி தாங்க வேண்டியிருந்தது.

ஒவ்வொரு தடவை மேக்-அப் செய்வதற்காகவும் 6 மணிநேரம் பொறுமையாகக் காத்திருந்தாராம் ரஜினி (அதுதாங்க ரஜினி ஸ்டைல்).

படத்தின் உயிரோட்டத் துக்குக் காரணமான வசனகர்த்தா மறைந்த எழுத்தாளர் சுஜாதா. படத்தின் பாடல் காட்சிகள் இதுவரை யாரும் படம் பிடிக்காத நாடுகளான பிரேசில், ஆஸ்திரியா, பெரு போன்ற நாடுகளில் படமாக்கப் பட்டது.

பிரபல சர்வதேச பாடல் - இசை இணையத் தளமான ஐருடியூன்ஸில் (iTunes) எந்திரன் பாடல்கள் முதன் முதலில் இடம்பெற்றதும் ஒரு மாபெரும் இந்தியச் சாதனையே!.

- ஞா.கிரிசாந்

**மு**ட்டையா? கோழியா? எது முதலில் வந்தது என்பது அவருக்குத் தெரியும்.

**ர**ஜினிகாந்தின் மின்னஞ்சல் முகவரி என்ன தெரியுமா? gmail@rajinikanth.com

**வ**யர் தொடுப்பில்லாத ஒரு தொலைபேசியால் கூட ஒருவரை சுருக்கிட்டுக் கொல்லக்கூடியவர்.

**உ**யிர் வாழ்வதற்காக அவர் சுவாசிப்பதில்லை. காற்றுத்தான் அவரது சுவாசப்பைக்குள் உயிர் வாழ்கிறது.

**மோ**னாலிசாவுக்கே புன்னகை கொடுத்தவர் அவர்.

**மா**த்திரைகளை சாப்பிட்டாலும் அவர் கண்கள் உறங்காது.

**க**ரப்பான் பூச்சிகொல்லி மருந்தால் ஸ்பைடர் மானையே கொல்வார்

**அ**வர் பிறக்க முன்பே சாரதி அனுமதிப்பத்திரம் எடுத்தவர்

**மு**ன் அட்டையை வைத்தே ஒரு புத்தகத்தை மதிப்பிடுவார்

**அ**வர் பியானோவில் வயலின் வாசிப்பார்.

**சி**றுவயதில் அவர் சிறுநீர் கழித்து மெத்தையை நனைத்ததில்லை. மெத்தைதான் அவருக்குப் பயந்து தன்னைத்தானே நனைத்துக்கொள்ளும்.

**மீ**னைக்கூட தண்ணிக்குள் மூழ்கடித்துக் கொல்வார்

மிஸ்டுகோலுக்கே (Missed call) அவரு பதிலளிப்பார்

அற்புதம், புகழ், திறமை, ஆச்சரியம்,etc…இந்த சொற்கள் அகராதியில் சேர்க்கப்பட்டதே 12.12.1949 அன்றுதான் அதுதான் ரஜினிகாந்த் பிறந்த வருடம்.

**ம**க்டொனால்ட்ஸ் (McDonald's) இலேயே அவர் இட்லி சாப்பிடுவார்

**வ**லி நிவாரணி மருந்துக்கே வலி கொடுக்கக் கூடியவர் ரஜினி

**ர**ஜினிகாந் மணிக்கூடு அணிவ தில்லை. ஏனெனில் நேரத்தையே அவர்தானே தீர்மானிக்கிறார்.

**நே**ரமும் கடலலையும் காத்திருக்கும் இவருக்காக

ஒளி செல்லும் வேகத்தில் ரஜினி செல்வதில்லை. ரஜினியின் வேகத்தில் தான் ஒளியே செல்கிறது.

ஈராக்கில் நாசகார ஆயுதங்கள் ஏதுமில்லையாம், ஏன்னா ரஜினிகாந்த் இருப்பது சென்னையில்தானே?

# ரோபோடா

**ர**ஜினிகாந்தின் பார்வையிலேயே தண்ணீர் வேகமாய் கொதித்துவிடும்

**நீ**திபதிக்கே மரண தண்டனை விதிப்பார்.

**இ**ரண்டு கற்களை ஒரு மாங்காயால் விழுத்துவார்

**ம**ழை நீரைக் கொண்டே பனி மனிதனை உருவாக்குவார்.

**ஒ**ரு போத்தல் தூக்க

கூகுளில் ரஜனியைத் தேட அவர் தேடுபவரையே கண்டுபிடித்து விடுவார்.

**ஒ**ரு நாளில் றோம் நகரையே கட்டக் கூடியவர்.

**அ**வரது கலண்டரில் ஏப்ரல் 1ம் திகதியே கிடையாது. அவரை யாரும் முட்டாளாக்க முடியாது.

**வெ**ங்காயத்துக்கே கண்ணீர் வரச் செய்வார்.

ரஜினி காந்தின் மிரட்டலுக்கு அஞ்சியே ஒரு இளம் பெண் அன்னை தெரேசாவானார்

# கணனி-நீ

**எதிர்கால இலட்சியத்தை - அதற்கான கல்வியை**

ஹொண்டா நிறுவனத்தின் ஹியுமொனோய்ட் றோபோவான அசிமோ, பப்பாயா சுசூக்கி என்ற நடனக்காரருடன் இணைந்து நடனமாடுவதையே இங்கே காண்கிறீர்கள்.

அசிமோ றோபோக்களின் 10 ஆண்டு நிறைவையொட்டிய நிகழ்வு டோக்கியோவிலுள்ள ஹொண்டா தலைமையகத்தில் நடைபெற்றபோதே, அசிமோ றோபோ ஒன்று ஒரு நடனக் காரருக்கு ஈடாக மேடையில் நடனமாடி அனைவரையும் அசத்தியது.

"புத்தாக்க நடமாட்டத்தின் முன்னேற்றகரமான அடியெடுப்பு" என்பதையே தாரக மந்திரமாகக் கொண்ட அசிமோ, ஹியுமொனோய்ட் றோபோக்கள் தொடர்பான ஹொண்டா நிறுவனத்தின் இரண்டு தசாப்த கால ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றாகும்.

1980களில் இந்த ஆராய்ச்சியை ஆரம்பித்த ஹொண்டா பொறியியலாளர்கள், 2000ம் ஆண்டிலேயே அசிமோவை தயாரித்து முடித்தார்கள். இப்போது அசிமோவுக்கு பத்து வயதாகிறது.

எந்திரன் திரைப்படத்தில் நடனமாடிய றோபோ, நடிகர் ரஜினிகாந் என்பது நாமறிந்ததே.

இந்த அசிமோ நிஜ எந்திரனாக்கும்.




## நிஜ எந்திரனின் ஆட்டம்

## தகவல் தொழில்நுட்ப இணைப்பிதழ்

# கணினி அறிமுகமும் அடிப்படைக்கட்டமைப்பும்




இன்று உலகில் கணினி என்பது எமது வாழ்வில் இன்றியமையாத ஒரு அங்கம் ஆகிவிட்டது. கணினி என்பது நாம் கொடுக்கும் பல்வகைப்பட்ட தரவுகளை உள்வாங்குதல் (Receiving) எமக்குத்தேவையான விதத்தில் அத்தரவுகளை மாற்றியமைத்தல்(Manipulating) சேமித்தல் (Storing) மற்றும் துல்லியமான கணிப்பீடுகளை மேற்கொள்ளல் (Calculating) போன்ற பல்வேறுபட்ட திறமைகளைக் கொண்ட ஓர் இலத்திரனியல் சாதனமாகும்.

பல விடயங்களில் மனித மூளையுடன் ஒத்திருப்பினும் கணினிக்கு கணிப்பு வேகமும், நினைவாற்றலும் மிகவும் அதிகம். ஆனால் சுயமாக சிந்திக்கும் ஆற்றல் என்பது அதற்கு கிடையாது.

கணினி எப்படி அமையவேண்டும் என்ற கோட்பாட்டை முதலில் உருவாக்கியவர் இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த கணிதப் பேராசிரியர் சாள்ஸ் பாபேச் (Charles Babbage) என்பவர் ஆவார். இவரே இன்றும் கணினியின் தந்தை என வர்ணிக்கப்படுகின்றார்.

இவர் முன்வைத்த கருத்தில்

1.உட்செலுத்தும் பகுதி (Input Unit)

2.மத்திய செயற்பாட்டுத் தொகுதி (Central Processing Unit) / செயற்படுத்தி (Processor)

இது மேலும் இரண்டு பெரும் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன

I.கணித தர்க்க செயற்பாட்டுத் தொகுதி (Arithmetic and Logical Unit)

II.கட்டுப்பாட்டுத் தொகுதி (Control Unit)

3.வெளித்தரும் பகுதி (Output Unit)

ஆகிய மூன்று பகுதிகள் அமையப்பெற்றிருந்தன.

(அ.) கணினியின் அடிப்படைக் கட்டமைப்பு




ஒவ்வொரு கணினியும் மேலுள்ள படம் காட்டுவதைப் போலவே முக்கியமான மூன்று அடிப்படைக் கட்டமைப்பைக் கொண்டமைந்திருக்கும்.

**1.உட்செலுத்தும் பகுதி (Input Unit)**

தரவுகள் (Data), நிகழ்ச்சித்திட்ட அறிவுறுத்தல்களை (Program Instructions) கணினியினுள் உள்ளீடு செய்யும் கருவி யாவும் Input Unit அல்லது Input devices என அழைக்கப்படுகின்றன.

Eg : Key board, Mouse, Scanner,Etc..

## 2.வெளித்தரும் பகுதி (Output Unit)

கணினியினுள் உள்ளீடு (Input) செய்த தரவுகளைச் செயற்பாட்டுப் பெறுபேறுகளாக ( Processed results ) பயன்பாட்டாளருக்கு வெளித்தரும் கருவிகள் யாவும் Output Unit / Output devices என அழைக்கப்படுகின்றன.

Eg : Monitor, Printer, Plotter Etc..

### குறிப்பு:

Disk ஆனது Input Unit ஆகவும், Output Unit ஆகவும் செயற்படுகிறது.

C.P.U உடன் அதற்கீடான வன்பொருளுடன் வெளியிணைப்பாக இணைக்கப்படும் கருவிகள் யாவும் துணை உபகரணங்கள் (Peripheral Devices) என அழைக்கப்படுகின்றன

## 3.மத்திய செயற்பாட்டுத் தொகுதி (Central Processing Unit)

கணினி ஒன்றின் மூளை அல்லது இதயம் என இதை நாம் கொள்ளலாம். இது கணினியின் சகல பாகங்களையும் கட்டுப்படுத்துவதுடன் கணித மற்றும் தர்க்கரீதியான தீர்வுகளையும் காண்கின்றது.

இதனுள் பல லட்சம் மூவாஜிகள் (Transistors) அடுக்கப்பட்டிருப்பதுடன் தரவுகளை வேகமாகக் கையாள்வதற்கென சிறிய நினைவகம் ஒன்றும் உண்டு. அந்நினைவகம் காச் நினைவகம் (Cache memory-64KB–128KB வரை) என



Transistors

பொதுவாக செயற்படுத்திகளின் (Processor) வேகம் Hz எனும் அலகிலேயே அளக்கப்படுகிறது. Processor ஐ வைத்தே கணினி ஒன்றின் இயல்பு தீர்மானிக்கப்படுகின்றது.







செயற்படுத்தியினுள் (Processor) பிரதானமாக காணப்படும் இரு பகுதிகள் காணப்படுகின்றன.அவை

Control Unit (C.U)

Arithmetic and Logical Unit (A.L.U)

### தரவு:

மாற்றப்படாத மாற்றத்துக்கு உட்பட இருக்கும் தகவல் தரவு எனப்படும்.

### தகவல்:

கணினிக்குள் தரவாக கொடுக்கப்படும் எழுத்துக்கள், எண்கள், குறியீடுகள், ஒளி மற்றும் ஒலி வடிவங்கள் மாற்றத்துக்கு உட்பட்டு இறுதி வெளியீடாக வருவது தகவல் எனப்படும்.

## 1.1.உட்செலுத்தும் கருவிகள் (Input Unit): ,

### Key board (விசைப்பலகை):

விசைப்பலகை அல்லது தட்டச்சுப்பலகை கணினிக்குத் தகவல்களை உள்ளீடு செய்ய உதவும் ஒரு வெளிப்புறக் கருவி. இந்த விசைப்பலகைகளில் எழுத்துகள், எண்கள், குறிகள், கட்டளைகள் ஆகிய விசைகள் அடுத்தடுத்து இருக்கும்.

தேவைக்கேற்ப இந்த விசைகளை தட்டுவதன் மூலம் கணினிக்கு கட்டளைகளையும் உள்ளீடுகளையும் வழங்கலாம். பெரும்பாலான மொழிகளுக்கு அவற்றின் எழுத்துகளைக் கொண்ட விசைப்பலகைகள் உள்ளன.

இதுபோன்று கணினியின் உட்செலுத்தும் பகுதிகளாக இருக்கும் ஏனைய பல கருவிகள் தொடர்பான விரிவான விளக்கங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

– சு.நேதாஜி

# பொன் தமிழால் கணினி உலகை வெல்வோம்

தமிழுக்கெனத் தனியான, சிறப்பான மென்பொருள்களை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான தளமாக பொன் தமிழ் இணையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக அதிக இணையத்தளங்களைக் கொண்டதும் செம்மொழியெனப் போற்றப்படுவதுமான தமிழ், கணினி உலகில் பின்தங்கிவிடாமல் கைகொடுப்பது இதன் நோக்கங்களில் பிரதானமானது.

பொன்பேனா, பொன்மொழி, பொன்விழி என்கின்ற முதன்மையான - தனித்துவம் வாய்ந்த - அத்தியாவசியமான மென்பொருள்களை உங்களுக்கு தருகின்றனர் பொன் தமிழ் உரிமையாளர்கள்.

**பொன்பேனா 1.0** (Only $60)

தமிழ் கையெழுத்தை இனங்கண்டு தட்டச்சு செய்யும் மென்பொருள்.

1. தமிழில் எழுதியதை உடனுக்குடன் தட்டச்சு செய்து தரும் உடனடித் தமிழ்த் தட்டச்சாளரே இது. சாதாரணமாக எழுதும் எல்லோருடைய கையெழுத்துக்களையும் படிக்கும் ஆற்றல் இதற்கு உள்ளது.

2.பொன்பேனாவிற்குப் பயிற்சி தேவையில்லை.

3.பல பக்கங்களை எழுதி, கோப்பில் சேமித்துவிட்டு, முழுவதுமாகப் படிக்க வசதியும், திறனும் மிக்க சொல்திருத்தியை உள்ளடக்கியது.

4.தவறுகளை உடனுக்குடன் திருத்திக்கொள்ளலாம்.

**பொன்பேனா பயன்படும் சில இடங்கள்**

இணையத்தில் படிவங்களைப் பூர்த்திசெய்தல்

இணையத்தில் தேடுவதற்குச் சொற்களை உள்ளிடுதல்

கடிதங்கள், கட்டுரைகள் எழுதுதல் - அவ்வப்போது எழுதுபவர்களுக்கு -அழகாக அச்சிட்ட உரையை அனுப்பலாம் .அல்லது கணிப்பொறி வழி மின்னஞ்சலில் அனுப்பலாம்.

இரகசியம் பாதுகாக்கப்பட வேண்டிய செய்திகளை ஒருவர் தானே எழுதுதல்

தட்டச்சு செய்ததில் உள்ள ஒரு சில பிழைகளை, தட்டச்சருக்காகக் காத்திருக்காமல், உடனடியாகத் திருத்துதல் -

தமிழில் கேள்வித் தாள்களை ஆசிரியரே தயாரிக்க முடியும். பலரும் ஒரே தட்டச்சரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டாம். இரகசியமும் பாதுகாக்கப்படும். பிழைகள் நேராது. பிழைதிருத்தும் நேரமும் மிச்சமாகும்.

**பொன்மொழி 3.0** (Only $30)

தமிழுக்குத் தரமான, விரிவான சொல்திருத்தியுடன் அகராதி, அகரவரிசையாக்கம் என பல வசதிகள் கொண்டமென்பொருள்.

Powerful word processor for Tamil with some unique features not found in any other software.

1.தரமான, விரைவான சொல் திருத்தி.

2.ஏழு அகராதிகள்.

3.தமிழ்99 தட்டச்சு மற்றும் ஆங்கில வகை விசைப்பலகைகள்.

4.பட்டியல்.

5.தமிழ் அகரவரிசையாக்கம்.

6.txt, .rtf, .doc, .html போன்ற fileகளாக சேமிக்கும் வசதி.

7.பல எழுத்து வகைகளுக்கும் மாற்றிப் பாவிக்கும் வசதி..

8.ஒன்பது தனித்தமிழ் மற்றும் ஒரு இருமொழி எழுத்து வகைகள் (கம்பன், கம்பன் குறுக்கம், கம்பன் விரிவு, அகத்தியர், அகத்தியர்குறுக்கம், அகத்தியர்விரிவு, அறந்தை, பாரதி, வள்ளுவர் )

9:திட்டமிடல், சுயதிருத்தம், அஞ்சல் அமைப்பு மற்றும் பல வசதிகள்

**பொன்விழி** (Only $250)

Scan செய்யப்பட்ட தமிழ் பக்கங்களில் உள்ளவற்றை பிழையின்றித் தட்டச்சு செய்யும் மென்பொருள்.

First and one and only one Tamil OCR.

இந்த மென்பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு கடந்த ஓகஸ்ட் மாதம் 14ம் திகதி மாலை 3 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நிலவு நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

நன்றி

**http://www.pontamil.com**

# கணினிக் கணைகள்

## உங்கள் சந்தேகங்களுக்கு எங்கள் தீர்வுகள்

**Q** எனது கணினி Pentium IV ஆகும். கடந்த சில மாதங்களாக Power Supply பழுதாகிவிட்டதால் கணினியை பாவிக்கவில்லை. இதனால் Hard Disk இல் உள்ள தரவுகள் அழிக்கப்படுமா? எனது கணினியில் Voice ஐ Record செய்வது எவ்வாறு?

-வி.வினோத்,சாவகச்சேரி

**A** கணினி பாவிக்காதிருப்பதனால் தரவுகள் அழிக்கப்பட்டுவிடுமோ என நீங்கள் பயம் கொள்ளத்தேவையில்லை. இருந்தபோதிலும், அதிக காலம் பாவனை செய்யப்படாதிருக்கும் இலத்திரனியல் சாதனங்கள் பழுதாவதற்கு கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. தூசு மற்றும் பூச்சிகள், அவற்றின் கழிவுகளால் இலத்திரனியல் சாதனத்துக்குள் குறுஞ்சுற்று(Short Circuit) ஏற்படும் வாய்ப்பு உண்டு.

Power Supply புதிதாகப் பொருத்த பெரிய செலவு ஏற்படாது. எனவே, அதை மாற்றி, கணினியைப் பாவனைக்குட்படுத்துவதே மேல்.

கணினியில் Voice ஐ Record செய்ய இலகு வழி Start Menu இல் All Programs ஊடாக சென்று பெறும் Accessories பகுதியில் Entertainment Menu ல் உள்ள Sound Recorder மென்பொருளினூடாக இலகுவாக Record செய்யலாம்.

**Q** எனது கணினி (P4, 2.6 Intel Processor, Matsonic Mother Board, 256 Ram, 80GB HDD). Run ஆகும் தருணத்தில் Restart ஆகின்றது. அத்துடன் வேலை செய்துகொண்டிருக்கும்போதும் திடீரென Restart ஆகின்றது. எனது Hard disk பழுதடைந்து தற்போது திருத்திப் பொருத்தியுள்ளேன். அடிக்கடி Powercut ஆவதால் ஏதும் சிக்கலுண்டா? என்னிடம் UPS இல்லை.

-பி.விஜி,நவாலி

**A** கூடுதலாக Hard disk தான் இதற்குக் காரணமாயிருக்கும். எதற்கும் மாற்றிப்பார்ப்பதன் மூலமே கண்டறியலாம். அடிக்கடி Power cut

ஆவது தான் இந்தப் பிழை ஏற்பட காரணம் என்று அடித்துக் கூறலாம். UPS ஒன்று வாங்கிப் பொருத்துவதே சிறந்த பாதுகாப்பு. உடனே செயற்படுத்துங்கள்.

**Q** இன்டர்நெட்டில் (Internet) இருந்து படங்களையும் பாடல்களையும் தேவையான Games களையும் மென்பொருட்களையும் கணனியில் பதிவிறக்கம் (Download) செய்வது எப்படி என்று சற்று விளக்கமாக கூறவும்.

- ரா.சரவணன், நாவற்குழி

**பதில் தருகிறார்: த.தவரூபன்**

**A** தெரிந்த முகவரியினூடாகவோ அன்றி Google போன்ற தேடுபொறிகளினூடாகவோ பெற்ற இணையத்தளங்களில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்புக்களில் Click here to Download, Download போன்றவற்றை கிளிக் செய்வதன் மூலம் தானாகவே குறித்த விடயங்களை பதிவிறக்கம் செய்ய முடியும். படங்களெனின் குறித்த படத்தின்மீது வலது கிளிக் செய்து பெறப்படும் உபமெனுவில் Save Picture as என்பதை கிளிக் செய்வதன் மூலமாக பெறப்படும் சேமிப்பு சாளரத்தினூடாக குறித்த படத்தினை விரும்பிய இடத்தில் சேமித்துக்கொள்ள முடியும். Microsoft Word (.doc), Excel(.xls), Powerpoint (.ppt), .pdf, mp3 கோப்புக்கள் எனில் குறித்த தொடுப்பில் வலது கிளிக் செய்து பெறப்படும் உபமெனுவில் Save Target as என்பதை கிளிக் செய்வதன் மூலமாக பெறப்படும் சேமிப்பு சாளரத்தினூடாக பதிவிறக்கம் செய்ய முடியும். பதிவிறக்கம் செய்வதற்கான தொடுப்புக்கள் எந்த வகையிலாவது தரப்படாத

மேற்கேட்கப்பட்ட விடயங்களில் எதனையும் சாதாரணமாக பதிவிறக்கம் செய்வது இலகுவான காரியமில்லை. அதற்கு Web Programing /HTML அறிவு ஓரளவு அவசியம்.

# மணியடிக்காத தபால்காரன்

ம.பிரசாத்

உங்கள் வீட்டு முகவரியைக் கேட்டால் பட்டென்று சொல்லி விடுவீர்கள். தொலைபேசி இலக்கம் இருக்கும். கம்பிவழி, கம்பியற்ற, கைத்தொலைபேசிகள் தான் வந்து விட்டனவே.

இவை மட்டும் போதுமா? நவீன உலகத் தொடர்பாடலுக்கு ஒரு மின்னஞ்சல் முகவரியும் இருக்க வேண்டாமா? இன்டர்நெட் வாசல்வரை வந்த பின்னும் என்ன தாமதம்? இதோ உங்களுக் கென்று ஒரு மின்னஞ்சல் முகவரியை ஏற்படுத்திக்கொள்ள இலகு வழிகாட்டி.

ஜீமெயில்(Gmail), யாஹு(Yahoo), ஹொட்மெயில்(Hotmail) என மணியடிக்காத பல தபால்காரர்கள் நவீன தொழில்நுட்ப யுகத்தில் உலா வருகின்றனர். இவர்களில் ஒருவருடன் உங்களுக்கென்று ஒரு மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்து கொண்டால் ஒரு சொடுக்கில் கனடா, அமெரிக்கா, ஐரோப்பாவிலிருந்தெல்லாம் கடிதம் கொண்டு வந்து தருவார்கள்.

முகவரி பதிவது எப்படி?

உங்களுக்கென்றொரு தனியான மின்னஞ்சல் கணக்கொன்றைத் திறக்க வேண்டும். உங்களுக்கேயுரிய இரகசியமான முகவரியும், இரகசியம் பேணுவதற்கென ஒரு கடவுச்சொல்லும் வைத்திருக்கவேண்டும்.

உதாரணத்திற்கு இன்று அதிக பயன்பாட்டிலிருக்கும், உத்தரவாதமான மின்னஞ்சல் சேவை என்று அதிகம் பரிந்துரைக்கப்படும் Gmail மின்னஞ்சல் சேவையை எவ்வாறு பயன்படுத்துவது என்று பார்ப்போம்.

கணினியின் இணைய உலாவியூடாக www.gmail.com என்ற இணையத்தளத்திற்கு செல்லுங்கள்.

விரியும் பக்கத்தில் காணப்படும் Create an Account எனும் Link ஐ Click செய்யுங்கள்.

இதன்போது விரியும் மின்னஞ்சல் கணக்கொன்றைத் திறப்பதற்கான கேள்விகள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்.

உங்கள் மின்னஞ்சல் முகவரி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை Desired Login Name எனும் பகுதியில் கொடுங்கள்.

அவ்வாறு நீங்கள் வழங்கியிருக்கும் பெயரில் மின்னஞ்சல் முகவரியொன்றைப் பெறலாமா என்பதை அறிந்து உறுதி செய்து கொள்வதற்கு அருகிலுள்ள Check Availability எனும் Button ஐ Click செய்யுங்கள்.




நீங்கள் வழங்கிய பெயரில் ஏற்கனவே யாரும் மின்னஞ்சல் முகவரியொன்றைப் பெற்றிருக்காவிட்டால் அதிர்ஷ்டக்காரன் தான். இல்லாவிட்டால் மாற்றவேண்டும். இதற்கான சில மாற்று முகவரிகளை அது பரிந்துரைக்கும்.

உதாரணமாக,ravi@gmail.com என்ற முகவரியை ஏற்கனவே ஒருவர் பெற்றிருந்தால், ravi என்ற உங்கள் பெயருடன், நீங்கள் பிறந்த ஆண்டு, அல்லது முகவரியை உருவாக்கும் ஆண்டு, உங்கள் மனைவி அல்லது பிள்ளைகளின் பெயர், முதற்பெயர் போன்ற ஏதோவொன்றை இணைத்து கிடைப்பனவாகவுள்ள முகவரியொன்றைத் தெரிவுசெய்யலாம் (உம்: ravi1992@gmail.com, sravi@gmail.com, ravipriya@gmail.com...)

அதன் பின்னர் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்குள் நுழைவதற்கான பாதுகாப்புக் கடவுச்சொல்லைக் கொடுக்கவேண்டும். இது இலகுவில் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடியதாகவும், அதேவேளையில் வேறொருவர் இலகுவில் கண்டுபிடிக்க முடியாததாகவும் இருக்க வேண்டும். எழுத்துக்கள், இலக்கங்கள்,குறியீடுகள் கலந்த கடவுச்சொல் மிகவும் பாதுகாப்பானது.

இவற்றைப்போலே அதில் கோரப்பட்டிருக்கும் ஏனைய விடயங்களையும் பூர்த்தி செய்து, உங்கள் கையடக்கத்தொலைபேசி இலக்கத்தையும் வழங்குங்கள். தமது மின்னஞ்சல் பாவனையாளர்களின் பாதுகாப்புக் கருதி Gmail நிறுவனம் கையடக்கத் தொலைபேசிகளிற்கே உறுதிப்படுத்தும் இரகசிய இலக்கங்களை அனுப்பி வைக்கிறது.

அனைத்துக் கேள்விகளிற்கும் விடையளித்துவிட்டால் கீழே இருக்கும் Button ஐ Click செய்யுங்கள். உங்கள் கையடக்கத் தொலைபேசிக்கு இரகசிய இலக்கமொன்று அனுப்பிவைக்கப்படும். அதனை வழங்கி உங்கள் மின்னஞ்சல் கணக்கிற்குள் நுழைய வேண்டியது தான்.

**உங்கள் கணக்கைப் பயன்படுத்துதல்**

இப்போது www.gmail.com என்ற தளத்திற்கு சென்று உங்கள் முகவரி மற்றும் கடவுச்சொல்லைக் கொடுக்க உங்களுடைய கணக்குப் பக்கம் விரியும். இதில் நீங்கள் மின்னஞ்சல்களைத் தட்டச்சுச் செய்து உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

Compose என்ற பொத்தானை அழுத்த விரியும் பக்கத்தில் நீங்கள் அனுப்பவேண்டிய விடயத்தைத் தட்டச்சு செய்யுங்கள்.

To என்று குறிப்பிட்டுள்ள பகுதியில் மின்னஞ்சல் சேரவேண்டியவரின் முகவரியைக் குறிப்பிடுங்கள். கடிதத்தின் பிரதிகளை யாருக்கும் அனுப்பப் போகிறீர்களாயின், Cc என்ற பகுதியில் அந்த நபருடைய முகவரியைக் குறிப்பிடுங்கள்.

Subject என்ற பகுதிக்குள் என்ன விடயதானம்




என்பதைச் சுருக்கமாக குறிப்பிட்டு Send பொத்தானைச் சொடுக்க மின் தபால்காரன் உங்கள் கடிதத்தை அக்கணமே உரியவரிடம் சேர்ப்பித்துவிடுவார். வெளியிலிருந்து உங்களுக்கு வரும் மின்னஞ்சல்களை Inbox பகுதிக்குச் சென்று பார்வையிடலாம்.

**மின்பொதிசேவை**

உங்கள் மின்னஞ்சலுடன் , ஏதேனும் படங்கள், கோப்புக்களையும் இணைத்து அனுப்பவேண்டுமாயின், Attach பொத்தானை அழுத்தி, உங்கள் கணினியில் நீங்கள் அனுப்பவேண்டிய படம் அல்லது கோப்பு இருக்கும் இடத்தின் வழியைக் காட்டித்தெரிவு செய்ய, மின்னஞ்சலுடன் அதுவும் இணைக்கப்பட்டு உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

**மொழிப்பிரச்சினை இல்லை**

மின்னஞ்சல் என்றதுமே அதை ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டுமென்று இல்லை. தமிழில் தட்டச்சு செய்து மின்னஞ்சல் பகுதியில் அதனைக் Copy-Paste செய்தோ, அல்லது தட்டச்சு செய்த Font மின்னஞ்சல் பெறுநரிடம் இருப்பது அவசியம்.




ஏன் இந்தச் சிரமம் எல்லாம் என்றுதான், ஜீமெயில் நேரடியாகத் தமிழில் தட்டச்சுச் செய்து அனுப்புவதற்கான இலகு வழியை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தமிழ் சொற்களின் உச்சரிப்பு ஓசையை ஆங்கில எழுத்தில் தட்டச்சு செய்தால் அது தானாகவே தமிழுக்கு மாற்றிவிடும்.இந்த வசதியைப் பயன்படுத்துவதற்கு Gmail இன் Settings பகுதிக்குச் சென்று Language Preferences ஊடாக மேற்கொள்ளவேண்டும்.

Gmailஐப் போன்றே Yahoo இல் மின்னஞ்சல் கணக்கொன்றைத் திறப்பதாயின் Yahoo இணையத்தளத்திற்குள் நுழைந்து Yahoomail எனும் Link ஐ Click செய்யுங்கள். அதில் விரியும் பக்கத்தில் Signup எனும் Link ஐ Click பண்ணுங்கள். இதன்போது விரியும் மின்னஞ்சல் கணக்கொன்றை திறப்பதற்கான கேள்விகள் அடங்கிய விண்ணப்படிவத்தில் கேட்கப்படும் கேள்விகளுற்கு பதிலளித்து உங்களுக்கான மின்னஞ்சல் கணக்கைத் திறவுங்கள். Gmail இல் குறிப்பிட்டதைப் போன்றே இதற்கும் படிமுறைகள் அமைந்திருக்கும். ஆனால் Gmail போன்று இரகசிய இலக்கம் உங்கள் கையடக்கத் தொலைபேசிகளிற்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது. இதைப்போன்றே Hotmail இலும் மின்னஞ்சல் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.

மைக்ரோசொப்ட் வேர்ட் தொகுப்பானது பொதுவாக ஆவணங்களைத் தட்டச்சு செய்து தயாரித்து, கணினியில் சேகரித்து வைக்கவும், printout எடுத்துப் பயன்படுத்தவும் உதவும் ஒரு மென்பொருள்.

இவற்றைத்தவிர அட்டவணைகளைத் தயாரிப்பது, chart மற்றும் ஒளிப்படங்களை இணைப்பது, எழுத்துருக்களை தயாரிப்பது, உருவங்களை (Auto shape) தயாரித்து அவற்றுக்குள் எழுத்துருக்களைக் கொண்டு செல்வது போன்ற இன்னோரன்ன வேலைகளையும் இதில் செய்ய முடியும்.




# Microsoft Word 2003இல்
## ஆவணமொன்றைத் தயாரித்தல்

மேலும், எழுத்துப்பிழை, இலக்கணப் பிழை திருத்தி (Spelling & Grammer Corrections), Mail Merge (மெயில் மேர்ஜ்) என்று சொல்லப்படும் ஒரே ஆவணத்தை வேறு வேறு முகவரிகளுக்கு அனுப்புவது என இன்னும் பல பணிகளையும் இதில் செய்துகொள்ளலாம்.

முதலில் ஒரு ஆவணத்தை எவ்வாறு தயாரித்து Print Out எடுப்பது என்பதை இப்பகுதியில் காணலாம்.

முதலில் Start ⟶ All Programs ⟶ Microsoft Office Micros⟶ffice word 2003 எனும் பாதை வழியாக Microsoft Office Word 2003 ஐ திறந்து கொள்ளுங்கள் (மைக்றோசொ.்.ப்ட் 2007ம் வந்துவிட்டாலும், இன்னும் பலர் 2003தான் பயன்படுத்துவதால், இதனையே இங்கு அறிமுகப்படுத்துகிறோம்).

Step 1 - Menu Bar ல் File Menu க்குச் சென்று New




எனும் கட்டளையைத் தெரிவு செய்யுங்கள்(படம் 2)

இப்போது, புதியதாக ஒரு ஆவணத்தைத் தட்டச்சு செய்வதற்கான வெள்ளைத்தாள் போன்ற பகுதி திறக்கும். அதில் கேசரும் (CURSER) காணப்படும். இதுவே நாம் எந்த வரியில் எத்தனையாவது எழுத்தில் உள்ளோம் என்பதை காட்டுவதற்கு உதவுகின்றது.

புதிய ஆவணத்தின் மேல் மற்றும் இடது பக்கத்தில் கோடிடப்பட்ட அளவீடுகளை (Ruler) காணலாம். இது எழுத்துக்களையும் பந்திகளையும் சரியான இடத்தில் அமைக்க உதவுகின்றது (படம் 3). Ruler மறைக்கப்பட்டு இருந்தால் View Menu வில் Ruler கட்டளையைத் தேர்ந்தெடுக்கலாம் (படம் 4).




Step 2 - அடுத்ததாக File Menu வில் Page Setup கட்டளை மூலம் தேவையான ஆவணத்தின் அளவை, பக்கவாட்டாகவோ அல்லது நீளவாக்கிலோ தேர்ந்தெடுக்கலாம் (படம் 5).

Page Setup Menu வில் பொதுவாக அங்குலத்தில் (Inch) அளவுகள்






காணப்படும். Tools Menu ல் Options கட்டளை மூலம் General Tabஐ தேர்ந்தெடுத்து அதில் Measurement Unit ஐ Inch ல் இருந்து cm க்கும் மாற்றலாம்.

Margin Tabல் உள்ள Top, Bottom, Left, Right அளவுகளுக்கு நமது தேவைக்கேற்றாற் போல் அளவுகளைக் கொடுக்கலாம் (படம் 6).

அடுத்து Tab ல் உள்ள Paper இல், Paper Size ஐ தேர்ந்தெடுக்க வேண்டும். உதாரணமாக நான் A4 வை தேர்ந்தெடுத்து இருக்கிறேன் (படம் 7).




இனி தேவையான Font ஐ தெரிவு செய்து ஆவணத்தைத் தட்டச்சு செய்வோம் (படம் 8).

தட்டச்சு செய்த ஆவணத்தை Print எடுப்பதற்கு,File → Print என்ற கட்டளையைக் கொடுப்பதன் மூலம் கீழேயுள்ளதுபோன்ற துணை மெனு தோன்றும்.

அதில் தேவையான பிரதிகளின் எண்ணிக்கை மற்றும் அச்சுச் செய்யப்போகும் தாளின் அளவு ஆகிவயவற்றைத் தெரிவுசெய்து ஓகே பட்டனை அழுத்தவும்.

நாம் ஒரு கடிதம் எழுதுகின்றோம் எனில் திகதி மற்றும் இடம் வலப்புற மூலையில் எழுதுவது




வழக்கம் அதைப்போலவே வேர்டில் செய்ய நாம் தட்டச்சு செய்த திகதி மற்றும் இடம் இரண்டு வரிகளையும் முதலில் தேர்ந்தெடுக்கு வேண்டும். (இரண்டு வழிகளில் நாம் தட்டச்சு செய்த விடயங்களை தேர்ந்தெடுக்க முடியும்.

வழி:1.சுட்டியை நமக்குத் தேவையான வரியில்




வைத்துக் கொண்டு வலப்பக்க பொத்தானை அழுத்திக் கொண்டு மேலே அல்லது கீழே இழுக்கும் போது தேவையான பகுதி தெரிவு செய்யலாம்

வழி:2 விசைப்பலகை மூலம் தேவையான இடத்துக்கு Curser ஐ கொண்டு சென்ற பின்னர் Shift Key ஐ அழுத்திக் கொண்டே விசைப்பலகையில் மேல் அல்லது கீழ் அம்புக்குறிகளை அழுத்துவதன் மூலம் தெரிவு செய்யலாம்)

குறுக்கு வழி (Short Cut ):

| | |
|---|---|
| New - (Ctrl+N) | Copy - (Ctrl +C) |
| Open - (Ctrl+O) | Paste - (Ctrl + V) |

**– அ.பெஸ்ரியன்**

# PHOTOSHOP இல் எடிட்டிங்

ஒரு காலத்தில் ஒரு சிலருக்கு மட்டுமே சாத்தியமாகியிருந்த கமரா பாவனை, டிஜிட்டல் கமராவின் வருகையின் பின்னர் அனைவரது கரங்களுக்கும் கிட்டியிருக்கிறது. மொபைல் ∴போன் கமராக்கள் இதை இன்னும் பரவலாக்கியிருக்கிறது.

ஆனால், டிஜிட்டல் கமராவோ, மொபைல் ∴போனோ, எதில் எடுத்த படமாக இருந்தாலும், அதனை எடிட் செய்து எடுக்கும்போதே அது முழு அழகு பெறும். இதற்குக் கைகொடுக்கிறது Photoshop.

CS 5 என்ற மிகப்பிந்திய வடிவம் வந்துவிட்டாலும், இன்றும் அனைவரதும் ஆதரவையும் வரவேற்பையும் பெற்றிருப்பது என்னமோ Photoshop 7.0 தான். எனவே, இதில் அடிப்படை எடிட்டிங்கைக் கற்றுக்கொள்வது சிறப்பானது.

**எப்படிச் செய்வது?**



போட்டோஷொப்பைத் திறந்து எவ்வாறு ஒரு ஒளிப்படத்தை தேவைக்கேற்ற அளவுகளில் மாற்றி அச்சுப்பதிவு செய்வது என்பதைக் காண்போம்.

Start ⟶ All Programs Adobe Photoshop 7.0 பாதையூடாக போட்டோஷாப்பைத் திறவுங்கள்.

அடுத்ததாக, File ⟶ New ⟶ கட்டளையைக் கொடுத்து புதிதாக ஒரு கோப்பைத் திறக்கவும். இதன்போது நமக்குத் தேவையான அளவுகளை (நீள, அகலம் மற்றும் புள்ளிப் பெறுமதி - pixels) கொடுக்கவேண்டும்.

ஒளிப்படம் ஒன்றின் அகலம் 6 Inches எனவும் உயரம் 4 inches எனவும் கொடுத்து Resolution பகுதியில் தேவைக்கேற்றாற்போல் புள்ளி அளவுகளைக் (பொதுவாக 300 / 200) கொடுக்கலாம்.

(Resolution என்பது, ஒரு குறிப்பிட்ட நீள, அகலத்துக்குள் எத்தனை புள்ளிகளைக் கொண்டு ஒளிப்படம் காட்டப்படவேண்டும் என்பதை குறிக்கின்றது. உதாரணத்துக்கு, 1cm X 1cm அளவுள்ள சதுரத்துக்குள் 10 புள்ளிகளை வைப்பதைவிட, 100 புள்ளிகளை வைத்தால் படம் அதிக செறிவாகக் காட்சியளிக்கும்).

அடுத்த கட்டளையான Modeஇல், Bitmap, Gray Scale (கறுப்பு-வெள்ளை படத்துக்குரியது), RGB Colour (கணினி, இணையக்



காட்சிப் பயன்பாட்டுக்கு), CMYK Colour (அச்சுப் பணிகளுக்கு), Lab Colour என 5 தெரிவுகள் உண்டு.

கமரா ஒளிப்படங்களை அச்சிடுவதற்குக் கொடுக்கும் போது CMYK Colour Mode ஏ பயன்படுத்துவோம்.

Contents பகுதியில் நம்முடைய கோப்பை புதிதாகத் திறந்தவுடன் எப்படிப்பட்ட வர்ணம் வர வேண்டுமென்பதை இதிலுள்ள 3 தெரிவுகளில் ஒன்று நிர்ணயிக்கின்றது. இதில் நான் White என்பதை தெரிவு செய்கிறேன்.

இப்போது நமக்குத் தேவையான ஒளிப்படத்தை திறக்கவேண்டும். நீங்கள் கமராவிலிருந்து இறக்கிய படத்தை Save செய்த இடத்திலிருந்து படத்தை Open செய்யவேண்டும்.

Open செய்வதற்கு 3 விதமான வழிமுறைகளை கையாளலாம்.
1.file menu → open

2.ctrl+O (Shortcut)

3.Photoshopன் பணிக்களத்தில் double click செய்வது.

பொதுவாக ஒளிப்படங்களில் தேவைப்படும் மாற்றங்களில் Brightness / Contrast ஏ முக்கியமானதாகும். ஒளிச்செறிவு குறைவான இடங்களில் எடுக்கப்பட்ட படங்களுக்கு தேவைக்கேற்ப ஒளியினை வழங்குவதும், அதிகளவு ஒளியில் எடுக்கப்பட்ட படத்திற்கு ஒளியின் அளவை குறைப்பதும் இதில் சாத்தியம்.

Image → Adjustments → Brightness / contrast ஐ தேர்ந்தெடுக்க படத்தில் உள்ளவாறு ஒரு கட்டளைத் தொகுப்பு தோன்றும்.




அதிலுள்ள Brightness கன்ரோலின் நடுப்பகுதியில் 0 - 100 வரையும் அளவுகள் காணப்படும். இதில் நம்முடைய தேவைக்கு ஏற்ப இடம் - வலமாக மாற்றத்தைச் செய்து படத்தில் ஒளியின் அளவைவோ, குறைக்கவோ முடியும்.

எடுத்துக்காட்டாக, கீழே உள்ள படத்துக்கு Brightness ஐ கொடுத்துக் காட்டுகின்றேன்.

கீழே உள்ள ஒளிப்படத்தில் காணப்படும் ஒளி இழந்த தன்மையை இந்தக் கட்டளையைப் பயன்படுத்தி தேவைக்கேற்ற அளவில் ஒளியூட்டலாம்.

அடுத்து contrast. இதில் ஒளிப்படத்தில் காணப்படும் ஒவ்வொரு நிறங்களின் செறிவைக் கூட்டிக் குறைக்க முடியும்.

உதாரணத்துக்கு, ஒளிப்படத்தில் உள்ள குறிப்பிட்ட நிறம் வெளிர் பச்சை எனில், contrast ன் அளவை மாற்றும்போது வெளிர்பச்சை நிறமானது அதன் மூல நிறமான பச்சையை நோக்கி மாற்றமடையும்.

அதேபோல் பச்சை நிறத்திலிருந்து குறைக்கும்போது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து சாம்பல் நிறத்தினை அடையும். நீங்கள் Photoshopல் இந்தக் கட்டளையை நேரில் பயன்படுத்திப் பார்த்தால் இந்த மாற்றத்தைக் காண்பீர்கள்.

அடுத்ததாக ஒளிப்படங்களுக்கான (RGB Color) மாற்றங்களைச் செய்து எப்படி எங்களுக்குத் தேவையான வண்ணத்தில் படத்தை வெளிக்கொணர்வது எப்படி என்று பாப்ப்போம்.

Image → Adjustments → Color Balance

பாதையூடாக கீழே காணப்படும் கன்ரோல் பனலுக்குச் செல்லுங்கள

மேலும் பல புதிய உத்திகளை உங்களுக்கு அறியத்தர அடுத்த சஞ்சிகையில் சந்திப்போம்.

(தொடரும்)

– அ.பெஸ்ரியன்

## வேகம் வேண்டுவோர்க்கு யு.எஸ்.பி. 3.0



தற்போது பாவனையில் உள்ள யுஎஸ்பி 1.1 மற்றும் யுஎஸ்பி 2.0 வைத் தொடர்ந்து, இவற்றைவிட 10 மடங்கு வேகமாக இயங்கக்கூடிய யுஎஸ்பி 3.0 (அதிவேக யுஎஸ்பி) சந்தைக்கு வரத் தயாராக உள்ளது. இது குறைந்த மின் பாவனையில் இயங்கக் கூடியதும் கூட.

முன்னைய வெளியீடான யுஎஸ்பி 2.0, 1 செக்கனுக்கு 480 Mbps (Megabyte Per Second) வேகத்தில் தகவல்களைக் கடத்தக்கூடியது. தற்போது வெளிவரவுள்ள யுஎஸ்பி 3.0 ஆனது 1 செக்கனுக்கு 5Gbps (Gigabyte Per Second) வேகத்தில் தகவல்கலைக் கடத்தும் வல்லமையுடையது.

மேலும் இதில் மின்பாவனைக் கட்டமைப்புச் (விழிப்பு, உறக்கம், நிறுத்தி வைத்தல்) செயற்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது.

இதனுள் புதிதாக 5 கேபிள்கள் பொருத்தப்பட்டு உள்ளது. அவை பழைய யுஎஸ்பி 2.0 இணைப்பினையும் கண்டறிந்து கொள்ளும். இதை ஒரே நேரத்தில் தகவல்களை வாசிக்கவும், எழுதவும்(Read & Write) கூடியது. இந்தக் கேபிள்கள் மிக வேகமாக மின் கடத்தவும் கூடியது என்பதால், நடமாடும் இலத்திரனியல் கருவிகளுக்கு (Portable Devices) இதன்மூலம் இலகுவாக மின்னேற்றவும் முடியும்.

எதிர்காலத்தில் Flash Drives, External Hard Drives, Digital Music Players மற்றும் டிஜிட்டல் கமராக்களுக்கு இந்தத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

2010 இறுதியில் இது வெளிவரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

டிஜிட்டல் கமராக்களில் எடுக்கும் படங்களை பிறின்ற் செய்து பின்னர் அதனை அல்பத்துக்குள் வைப்பது அல்லது பிறேம் போட்டு மாட்டுவது என்பது அதிக செலவான விடயம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது Viewsonic இன் Digital Photo Frame.

DPG801BK, DPG807BK என்ற இரண்டு மொடல்களாக வந்திருக்கும் இந்தக் கருவியில் நேரடியாக Flash Drives, Memory Cards போன்றவற்றிலிருந்து படங்களைத் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். படங்களை இலகுவாக இதில் ப்ார்க்க முடியும் என்பதுடன், வேண்டிய படங்களை Zoom செய்து பார்க்கவும், Slide Show ஆகப் படங்களைப் பார்க்கவும் முடியும்.

தற்போது இது சுமார் 130 அமெரிக்க டொலர்களுக்கு உலக சந்தைக்கு வந்திருக்கிறது. நம்மூர்ச் சந்தைக்கும் வந்துவிட்டால் கலக்க வேண்டியதுதானே?

## டிஜிட்டல் போட்டோ பிறேம் (Digital Photo Frame)

# அழகே உன்னை ஆராதிக்கின்றேன்

**கண்ணுக்கு மை அழகு..**

**கவிதைக்குப் பொய் அழகு..**

**கன்னத்தில் குழி அழகு...**

**கார் கூந்தல் பெண் அழகு..**

பெண்களுக்கு கூடுதல் அழகைத் தருவது நீண்ட கூந்தல். ஆனால், இன்றைய பெண்களுக்கு முடி உதிர்வது அதிகரித்து வருகின்றது. இதற்கு என்ன காரணம் என்று தெரியாமல் பலரும் அங்கலாய்ப்பதுண்டு.

**இதோ**

# முடி உதிராமலிருக்க...

முடி உதிர்வதற்கான சில காரணங்களும், அந்தக் காரணங்களை நீக்க நீங்கள் செய்யக்கூடிய காரியங்களும்...

### முடி உதிர்கிறது என்றால் என்ன காரணமாக இருக்கலாம்?

1.மனக்கவலை

2.சீரற்ற காலநிலை மாற்றங்கள்(வெயில் காலத்தில் முடி நன்றாக வளரும், குளிர் காலத்தில் முடி அதிகமாக உதிரும்)

3.உடலில் உள்ள ஹோர்மோன்களின் செயற்பாடுகளுக்கு ஏற்ப முடி உதிர்கிறது.

4.இரும்புச்சத்து, கொழுப்புச் சத்துக்களின் அதிகரிப்பு.

அம்மை, வைரஸ் காய்ச்சல், நீரிழிவு போன்ற நோய்கள்(நோய் குணமான பின்னரே உதிரத் தொடங்கும்).

5.மற்றவர்கள் பயன்படுத்திய சீப்பைப் பயன்படுத்துதல்.

6.தலையணை உறைகளை அடிக்கடி அலசாமல் விடுவது.

இவற்றில் என்ன காரணத்தால் உங்களுக்கு முடி உதிர்கிறது என்பதைக் கண்டுகொண்டுவிட்டால், கட்டுப்படுத்துவதற்கான வழிவகையைக் கடைப்பிடிக்கலாம்.

### முடி உதிர்வதை தடுக்கும் வழிகள்:

முடி உதிரும் காலங்களில் தலைக்குத் தயிரைத் தேய்த்தல்.

தலையில் குளிக்கும்போது ஷம்போ நீங்கும் வரை நன்றாக முடியை அலசுதல்.

தலையணை உறைகளை அடிக்கடி மாற்றி சுத்தமாக வைத்திருத்தல்.

கண்ட கண்ட கிறீம்களை (Hair Gell) முடியில் பூசாதிருத்தல்.

மின்சாரக் கருவிகளைக் (Hair Drier) கொண்டு முடியை சீர்செய்யாதிருத்தல்.

அதிகநேரம் தொப்பி அணிவதைத் தவிர்த்தல் - குறிப்பாக ஹெல்மட்.

முடிக்கு வர்ணம் (Hair Die) தீட்டுவதைத் தவிர்த்தல்.

முடியை இழுத்துப் பிடித்து சீவாமல் இலேசாக சீவவேண்டும்.

அடிக்கடி கைகளால் தலையை கோதிவிடுவது, நீவி விடுவது. இவைதவிர,

1. காலையில் முடிக்குத் தேங்காய் எண்ணெயைத் தடவி அரைமணி நேரம் ஊறவிட்டபின், முட்டை வெள்ளைக்கருவைத் தலையில் வைத்துத் தேய்க்க வேண்டும். சிறிது நேரம் கழித்து நீரில் நன்றாக அலசி விடவும்.

2. சிறிது தேங்காய்ப்பால், ஒரு எலுமிச்சம்பழச்சாறு என்பவற்றைக் கலந்து தலையில் நன்றாகத் தேய்த்து சிறிது நேரம் கழித்து நல்ல தண்ணீரில் நன்றாக அலசிவிடவேண்டும்

3. காய்கறிகள், பழங்கள், பால், மற்றும் புரத உணவுகள் (பயறுவகைகள், மீன், இறைச்சி), வெண்ணெய், இரும்புச்சத்து அடங்கிய உணவு(கீரை வகைகள்) வகைகளை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ளல்.

மேற்சொன்ன வழிமுறைகளை முறையாகக் கடைப்பிடித்தால் முடி உதிர்வது குறைவது மட்டுமன்றி கருகருவென்று நீண்ட முடி வளரும்.

அரை அடிக் கூந்தல் கூட ஆறடிக் கூந்தலாகிடும்.

**- இ.உமாசங்கரி**
கலாலயா

# உயிர்குடிக்கும் உடற்பருமன்

பொதுவாக ஐரோப்பிய நாடுகளிலும், நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்குமே ஒரு பிரச்சினையாக இருந்துவந்த உடற்பருமன், மேற்கத்தைய கலாசாரம் ஆசிய நாடுகளிலும் பரவி வரும் இன்றைய காலகட்டத்தில், நமது நாட்டிலும் ஒரு பிரச்சினையாகத் தொடங்கிவிட்டது.

நவீன கலாசாரத்தில் உடலமைப்பு என்பது முக்கியத்துவமானதாக கருதப்படுவதால், ஆண்-பெண் இருபாலாரும் சந்திக்கக்கூடிய பொதுவான பிரச்சினையாக இது இருக்கிறது.

**ஏன் பருக்கிறது?**

ஒழுங்கற்ற உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சியின்மை என்பனவே உடலை ஊத வைக்கும் முதன்மைக் காரணிகளாக இருந்தாலும், மரபணு சார்ந்தும் இது தீர்மானிக்கப்படுகிறது. இது ஒரு மருத்துவப் பிரச்சினையாக மட்டுமன்றி, சமூகப் பிரச்சினையாகவும் மாறிவருவதால், இதற்கான காரணிகளும் தீர்வுகளும் பற்றிய அறிவு அவசியமாகின்றது.

எமது உணவுப் பழக்கத்தில் நாக்கின் ருசிக்கே நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஊட்டச்சத்து, உடல் ஆரோக்கியம் பற்றி அதிக அக்கறை கொள்வதில்லை. இதனால், உடலில் தேவையற்ற கொழுப்பு சேமிக்கப்பட்டு உடல் பருமனடைகிறது.

**வயிறென்ன குப்பைத்தொட்டியா?**

விரைவுணவுகள் (Fast foods), நொறுக்குத் தீனிகள் (Shorteats), இனிப்பு வகைகள் (Sweets), ஐஸ்கிறீம், குளிர்பானங்கள் என்று நீண்டு செல்லும் உணவு வகைகள் மீது குழந்தைகள் முதல் முதியவர் வரை கொண்டுள்ள மோகம் எமது வயிற்றைக் குப்பைத் தொட்டியாக்கி, உடம்பை சள்ளை வைக்கச் செய்கிறது.

போட்டி போட்டு முன்னேறும் இந்த உணவு வகைகளுக்கான தொலைக்காட்சி, பத்திரிகை விளம்பரங்கள் கூட எமது உடற்சதை அதிகரிப்புக்கு ஊக்கமளிக்கின்றன.

அளவாகத்தான் சாப்பிட்டாலும்கூட, சிறிதளவேனும் உடற்பயிற்சியில் ஈடுபடாது, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே சாப்பிடுவது, கணினிக்கு முன்னால் தொடர்ந்து அமர்ந்திருப்பது போன்ற பழக்கங்களால் உடற்பருமன் அதிகரிக்கவே செய்யும்.

இந்தப் பழக்கங்களால் அதிகரிக்கும் தூக்கமின்மையும் உடம்பை ஊதச்செய்யும்.

**உடற்பருமன் ஏற்படுத்தும் தாக்கம்:**

வாழ்க்கை முழுவதும் இது உடல், உள ரீதியாக பல பிரச்சினைகளைக் கொடுக்கக்கூடும். பருமனான இளவயதினரிடம் உடலமைப்புக் குறித்த கவலையினால் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு, கூச்ச சுபாவத்தினால் தனிமைப்பட்டுப் போவார்கள்.

உடல் ரீதியான கவர்ச்சியே எதிர்ப்பாலாரின் விருப்பாய் இருப்பதனால், தாம் வெறுத்து ஒதுக்கப்படுவதாக இவர்கள் உணர்வார்கள். இது மனோ ரீதியான துன்பத்தைக் கொடுக்க, இதுவே உடற்பருமன் இன்னுமின்னும் அதிகரிக்கக் காரணமாகிவிடும்.

உடற்பருமனால் இருதய நோய்களும், என்பு, மூட்டு தேய்ந்து போவதும், நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் அதிகரிப்பது மட்டுமன்றி பக்கவாதம், புற்று நோய் என்பனவும் ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. பெண்களுக்கு கர்ப்பமாவதில் தடை மற்றும் குழந்தைப்பேறின்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனவும் இதனுடன் தொடர்புடையனவே.

**குறைக்க என்ன செய்யலாம்?**

'காயமே இது பொய்யடா? காற்றடைத்த பையடா' என்று ஒரு பாடல் உண்டு. அதற்காக, உடல் பருமனைக் குறைக்க காற்றைத் திறந்தா விடமுடியும்? உருப்படியாக ஏதும் செய்தாலன்றி, உடல் பருமனைக் குறைக்க முடியாது.

உணவுக் கட்டுப்பாடே இதற்கு நல்ல வழிமுறை ஆயினும், முறையான வழிகாட்டலுடன் இதனைச் செய்யவேண்டும். உடம்பைக் குறைக்கிறேன் பேர்வழி என்று, அதீத உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தால், உடம்புக்கு அவசியமான புரதச் சத்து மற்றும்

கலோரிகள் குறைந்து உடல் வளர்ச்சி தடைப்படும்.

ஒரு வேளை மட்டும் உணவு



உட்கொள்வது, பசி எடுக்காமல் இருக்க மாத்திரைகளை பயன்படுத்துவது என்பனவும் உடல் வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்யும்.

உடனடி மாற்றத்தை எதிர்பார்த்து உடல் எடையைக் குறைக்கும் மாத்திரைகள் உட்கொள்வதோ, கடினமான உடற்பயிற்சிகள் மேற்கொள்வது கூட ஆபத்தாகி, குறிப்பாக பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினை, ஆண்களுக்குத் தசை வளர்ச்சிக் குறைபாடு ஏற்பட வழிவகுத்துவிடும்.

### எது அளவு கோல்?

ஒருவரின் இடுப்பளவு அவர்களின் உடற்பருமனைச் சுட்டிக்காட்டும் ஒரு அளவுகோல். இது மெட்டபோ என அழைக்கப்படுகிறது (metabo). வயது வந்த ஆண்களின் இடுப்பளவு 33.5 அங்குலத்திற்கு உள்ளும், பெண்களிற்கு 35.4 அங்குலத்திற்கு உள்ளும் இருக்கவேண்டும்.

ஒருவர் தனது உயரத்திற்கேற்ற உடல் நிறையைப் பேணுவது உடல் ஆரோக்கியத்துக்கு அவசியமானது. உடற்திணிவுச் சுட்டி (Body Mass Index) பற்றிய விளக்கம் இருந்தால், இதனைப் பேணுவது சுலபம். நிறைக்கேற்ற உடற்திணிவை காட்டுவதே இச்சுட்டியாகும்.

$$BMI = \frac{\text{Weight in Kilograms}}{\text{Height in Meters}^2}$$

சாதாரணமாக உடற்திணிவுச் சுட்டி 18.5 – 24.9 ற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். உம்: 150cm உயரத்தில், 50Kg நிறையுடைய ஒருவரின உடற்திணிவுச்சுட்டி 22.2 ஆகும்.

எமது உயரத்திலிருந்து 100cm ஐக் கழித்து வரும் பெறுமானத்தின் 90% ஐ நிறையாகக் கொண்டிருப்போம் எனில் அது சராசரி நிறையாகும்.(உம்:150 cm, உயரமுள்ள ஒருவரின் நிறை 150-100=50*90%=45kg)

மேற்காட்டியவாறு உடற்திணிவுச் சுட்டியைக் கணித்து அது அதிகமாக இருப்பின், உடல் நிறையைக் குறைக்க முயற்சிக்கவேண்டும்.

### எளிய வழிமுறைகள்

சாப்பாட்டு விடயத்தில் பின்வரும் வழிமுறையைப் பின்பற்றலாம்

பசித்த பின் புசி

வாயை திறக்க தாமதிக்கவும் மூடுவதற்கு முந்தவும்

மெல்லுக முடிந்தவரை (நன்றாக மென்று உண்ணவும்)

இதுதவிரவும்,

1. தினமும் நிறையுணவு உட்கொள்ளல் - மாப்பொருள்-55%, கொழுப்பு-30%, புரதம்-15% இருக்க வேண்டும்.

வெள்ளை அரிசி, கோதுமை, சீனி மற்றும் கிழங்குணவு வகைகள் போன்ற உயர் கலோரிப் பெறுமானம் கொண்ட மாச்சத்து மற்றும் வெல்ல உணவு வகைகளை குறைத்தல்.

2. தினந்தோறும் 30 நிமிட உடற்பயிற்சி (இதற்குக் குறுக்குவழி கிடையாது).

3. பாலுணவு வகைகள், தயார் செய்யப்பட்ட உணவுகள் (Process food) போன்ற கொழுப்புணவு வகைகளைக் குறைத்தல்.

4. நார்ச்சத்துள்ள உணவு வகைகளை முழு உணவாக உட்கொள்ளல் - இதனால் மேலதிக போசாக்கு உடலுக்குக் கிடைப்பதுடன், வெல்லம் குருதியில் தாமதமாகவே கலக்கின்றது.

5.இயற்கையாக விளைந்த உணவுவகைகளை (Organic foods) முடிந்தவரை உட்கொள்ளல் சிறந்தது.

6.குறைந்தளவு உணவை உண்பதுடன், உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்கள் ஏனைய போசாக்குள்ள உணவுப் பொருள்களை குறை நிரப்பிகளாக எடுத்தல். இது சேமிப்புக் கலங்களிலுள்ள கொழுப்பை எரித்து, மீண்டும் உடல் நலம் பெறும் வேகத்தையும் அதிகப்படுத்தும்.

இந்த வழிமுறைகளைப் பின்பற்றினால், எமது உடற்பருமனை நாமே தீர்மானித்து அதற்கேற்ற வகையில் எமது உடலமைப்பை சாதாரணமாகப் பேணமுடியும்.

முயன்றுதான் பாருங்களேன்.

**– ம.யசோநிதி**



# Badminton

# ஓடி விளையாடு பாப்பா...

பாரதியாரின் இந்தப் பாடல் எல்லோருக்குமே தெரிந்த ஒன்றுதான். அவர் ஓடி விளையாடச் சொன்னதென்னவோ சின்னப் பாப்பாக்களைத்தான் என்றாலும், விளையாட்டென்றால் யாருக்குத்தான் ஆசையிருக்காது?

எமது வாழ்வை நாம் மகிழ்ச்சியாகவும், நோய் துன்பங்களின்றியும் வைத்துக்கொள்வதற்கு விளையாட்டு இலகுவான ஒரு வழி. அது நல்ல உடற்பயிற்சியாகவும் அமைந்துவிடுவதுடன், மனதுக்கும் புத்துணர்ச்சியூட்டும்.

இவ்வாறு எந்த வயதினரும், ஆண், பெண் என இருபாலாரும் விளையாடிக் களிக்கக்கூடிய விளையாட்டு Badminton (பூப்பந்தாட்டம்).

இந்த விளையாட்டில் எமது உடலின் முழு அங்கங்களுமே சுறுசுறுப்பாக இயங்கிப் பயிற்சிபெறுவதுடன், புத்துணர்ச்சியடைகிறது.

1. இரு பக்கங்களிலும் அடிக்கப்பட்டுப் பறந்துவரும் பூப்பந்திலேயே கண்கள் குறியாக இருக்க வேண்டும்.

2. கைகளும், உடலும் பறந்துவரும் பூப்பந்தைத் தேடியடிப்பதற்கு இங்குமங்கும் அசைந்து கொண்டேயிருக்க வேண்டும்.

3. இங்குமங்குமாய் மாறி மாறி வரும் பூப்பந்தைத் தேடியடிக்க கால்கள் ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும்

4. மனம் சிதறாமல் விளையாட்டில் ஒன்றித்திருக்க வேண்டும்.

5. இதனால் எம்மை அறியாமல் எமது உடல், மனம் இரண்டுமே ஆற்றல் பெறுகிறது.

கிட்டதட்ட டென்னிஸ் விளையாட்டை ஒத்த இந்த விளையாட்டு, டென்னிசைவிட யாரும் விளையாடக்கூடிய இலகுவான ஒன்றாக இருக்கிறது. வீட்டில் இருக்கும் எந்த வயதான, எந்தப் பாலினரும், இரண்டு பேராகச் சேர்ந்தால் இந்த விளையாட்டை விளையாடி மகிழலாம்.

பூப்பந்தை (shuttle cock) அடித்து விளையாடும் விளையாட்டென்பதால், காற்றில்லாத சூழல் இதற்கு முக்கியம். இதனால், இது ஒரு உள்ளக விளையாட்டாகவே (Indoor Game) பொதுவாக விளையாடப்படுகிறது.

ஆனால், வீட்டில் காற்றில்லாத இடத்தில் முற்றத்திலோ அல்லது உள்முற்றத்திலோ, நான்கு பக்கமும் சுவருள்ள உயரமான மண்டபங்களுக்குள்ளோ இந்த விளையாட்டை விளையாட முடியும்.

Badminton மைதானத்தின் உண்மையான நீளம் 670 cm ஆகவும் அகலம் 518 cm ஆகவும் இருக்கவேண்டும் என்பது விதி. இதற்கு நடுவில் 2 அடி 6 அங்குலம் அகலமுடைய வலை, நிலத்திலிருந்து 5 அடி உயரத்தில் கட்டப்பட வேண்டும்.

வீட்டில் சும்மா பொழுதுபோக்காக, உடற்பயிற்சிக்காகவும், மன மகிழ்ச்சிக்காகவும் விளையாடுவதானால், இந்த விதிமுறைகளெல்லாம் கட்டாயமென்றில்லை.

வலையின் இரண்டு பக்கமும் ஒவ்வொருவராக நின்றோ, அன்றி, பக்கத்துக்கு ஒரு சோடியாக, இரட்டையராக அணிசேர்ந்தோ இந்த விளையாட்டை விளையாடலாம்.

ஆரம்பத்தில் பூப்பந்தை அடிப்பது சேர்விஸ் எனப்படுகிறது. சேர்விஸ் போடும்போது பூவை ஒருகையால் இலேசாகப் பிடித்து, Racket ரால் அடிக்கவேண்டும். நடக்காமல், நின்றபடி சேர்விஸ் போடவேண்டும் என்பது விதி.

வலையிலிருந்து தொலைவில் பின்னாலிருந்து சேர்விஸ் போட்ட பின், நடுப்பகுதிக்கு வந்து நின்றால் இலேசாக தொடர்ந்து ஆட முடியும்.

ஒரு பக்கத்தில் இருவர் விளையாடும் போது மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் விளையாடவேண்டும்.

இருவருடைய கைகளிலும் Racket இருப்பதால் பூவை அடிக்கும் போது அவை ஒன்றிலொன்று அடிபடக்கூடும். அவ்வாறு நடந்தால் அந்த இரட்டையர்

சோடிக்கு புள்ளிகள் கிடைக்காமல் போய்விடும்.

15 தொடக்கம் 21 புள்ளிகள் வரையில் புள்ளியிடும் முறை இந்த விளையாட்டில் கடைப்பிடிக்கப்படுகிறது. பெண்களின் ஆட்டத்தில் 11 புள்ளிகளைக் கொண்டு வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். ஆண்கள் எனின்

**விளையாடும்போது கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் :**

01. அடிக்கப்பட்ட பூ வலைக்கு மேலாகச் சென்று எதிர்ப்பக்க எல்லைக்கோட்டுக்கு உள்ளே விழ வேண்டும்.

02. servise (சேவிஸ்) போடும்போது பூ கையை விட்டு நழுவுதல் கூடாது.

03. servise போடும்போது இடுப்புக்கு கீழே பூவை வைத்து போடுதல் கூடாது.

04. அடுத்த குழுவினர் தயாராகும் முன்னர் servise போடுதல் கூடாது.

05. விளையாடும்போது Racket வலையை முட்டுதல் கூடாது.

06. ஒரு தடவையிலே பூ எதிரணியைச் சென்றடைதல் வேண்டும்.

07. பூவை அடிக்கும்போது ஆட்டக்காரரின் உடலையோ, உடையையோ தொடக்கூடாது.

08. பூவை மேலே எறிந்து சேர்வீஸ் போடக்கூடாது.

09. தவறான பக்கத்தில் இருந்து servise ஐ போடுதல் கூடாது.

10. கோட்டை விட்டு வெளியே பூ போகக் கூடாது.

அது 21 புள்ளிகளாக இருக்கும்.

இந்த விளையாட்டின் முடிவுகளை நடுவர் ஒருவர் தீர்மானிப்பது வழக்கம். ஆனால், வீட்டில் பொழுது -போக்காக விளையாடப் போகிறோமென்றால், நமக்கு நாமேதான் நீதிபதி.

**புள்ளியிடும் முறை :**

1.சேர்வீஸ் போடும்போது எதிர்த்தரப்பிலிருப்பவர் திரும்ப அடிக்காவிட்டால் சேர்வீஸ் போட்டவருக்கு 1 புள்ளி.

2.எவர் ஒரு தடவை பூவை அடிக்கத் தவறினாலும் எதிர்த்தரப்புக்குப் புள்ளி.

3.சேர்வீஸ் எதிரணியின் எல்லைக்கோட்டுக்கு அப்பால் சென்றால், எதிரணிக்கு ஒரு புள்ளி.

வெற்றி தோல்வியைவிட, விளையாட்டின் மூலம் கிடைக்கும் உடற்பயிற்சியும், மனமகிழ்வும் தானே முக்கியமானது?

**– கி. கிருத்திகா**

# வாங்க நடக்கலாம்

உடற்பயிற்சி செய்ய முடியாமல் இருக்கு. நேரமும் கிடைப்பதில்லை என்று புலம்புகிறீர்களா? கவலையை விடுங்கள்.

நல்ல நடையே சிறந்த உடற்பயிற்சிதான். எல்லோராலுமே நன்றாக நடக்க முடியும்தானே?

நடப்பதால் என்ன நன்மை என்று யோசிக்கிறீர்களா? உடலில் இரத்த ஓட்டம் தடையின்றி நடைபெறுவ-தோடு, வலிப்பு கோளாறுகள் வரும் வாய்ப்புகள் குறையும்.

1. நரம்புகள் வலுவடையும்.

2. தசைகளின் தொய்வுகள் நீங்கும்.

3. எலும்புகள் வலுவடையும்.

4. மூட்டுக்கள், பந்துக்கிண்ணங்கள், கீழ் மூட்டுக்கள் அசைவதால் மூட்டுவலி குறைவடையும்.

5. வியர்வையுடன் கழிவு நீர் வெளியேறுவதால் உடல் ஆரோக்கியமடைவதுடன், சிறுநீரகத்தின் வேலைப்பளு குறைவடைகிறது.

6. உயிர்ப்ப சுவாசம் அதிகமாகிறது.

7. மூளை சுறுசுறுப்பு அடைகிறது.

8. சிந்தனை வளம் பெறுகிறது.

9. மண்டை ஓட்டின் தோல்ப்பகுதிக்கும் குருதி பரவு-வதால் தலைவலி வருவது முற்றாக நீங்கிவிடும்.

10. சீரான சுவாசம் பெறுவதால் நுரையீரலின் ஆற்றல் அதிகரிக்கின்றது.

11. நுரையீரலையும், இரைப்பையையும் பிரிக்கும் சுவரான உதரவிதான தசைகள் வலுவடைகின்றது.

என்ன?

நடக்கலாம் என்று தோன்றுகிறதா?

வாங்க நடக்கலாம்?

**– செ. கார்த்திகா**

# குறை ஒன்றும் இல்லை

**இயற்கையின் மொழிகள் புரிந்துவிடில்**

**மனிதரின் மொழிகள் தேவையில்லை**

**இதயத்தின் மொழிகள் புரிந்துவிடில்**

**மனிதர்க்கு மொழியே தேவையில்லை...**

அன்று அப் பாடசாலையில் வாணிவிழா நிகழ்ச்சி. மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் இணைந்து ஒரு குடும்பம் போல பம்பரமாகச் சுழன்றுகொண்டிருந்தார்கள்.

பச்சை, மஞ்சள், சிவப்பு நிறங்களில் மாணவிகள் பாவாடை தாவணியும், சேலையும் அணிந்திருக்க, ஆண் பிள்ளைகள் காற்சட்டை, சட்டை அணிந்திருந்தனர்.

“விஜி என்ன பாடத் தயார்தானே?”

“ஓம் ரீச்சர்” என்று சொன்ன அந்த மாணவிக்கு இரண்டு கண்களிலும் பார்வை கிடையாது.

விழா ஏற்பாடுகளுடன் ஆசிரியர்கள் ஒரு புறம் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்க, “டேய் எனக்கு இந்த சேட் எப்படி இருக்கு?”, “தலைக்கு ஏன் மாலை வைக்கேலலை” என்று, மாணவர்கள் சைகைகளால் மௌனமாக உறவாடிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் வாய் பேச முடியாத பிள்ளைகள். அவர்களால் பேசவோ கேட்கவோ முடியாது. ஆனால், எல்லா மாணவர்களையும்



போலவே அனைத்தையும் செய்யும் ஆற்றலுடையவர்கள்.

“இப்படி சைகை மூலம் கதைச்சு உங்கட தேவைகளை பூர்த்திசெய்வது, படிப்பதெல்லாம் சிரமமாக இல்லையா?” என்று ஒரு ஆசிரியரின் உதவியுடன் அவர்களிடம் கேட்க, “சற்றுக் கவலையாக இருந்தாலும், பேச்சு எமக்கு ஒரு தடையல்ல” என்று சட்டென்று பதில் வந்தது.

விழா முடியும்வரை அவர்களே சகல வேலைகளையும் சலிக்காமல் செய்துகொண்டிருந்தமை இதை தெளிவாக நிரூபித்தது.

இவர்களை நன்கு பராமரித்து, அன்பையும், கல்வியையும் வழங்கி ஒரு தாயைப் போல பாதுகாத்து வருவது கைதடியில் அமைந்துள்ள நஃவீல்ட் விழிப்புலன், செவிப்புலனற்றோர் பாடசாலை.

**பாடசாலை**

அங்கிலிக்கன் திருச்சபையால் உருவாக்கப்பட்ட இலங்கை செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலைகளில் இதுவும் ஒன்று. இங்கு தற்போது தரம் 1 தொடக்கம் தரம் 11வரை 250 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களில் விழிப்புலனற்ற, 34பேர் தவிர, ஏனையோர் செவிப்புலனற்றவர்கள். இவர்களிலும் 85 பிள்ளைகள் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள்.

இங்குள்ள 4 பெண்கள் விடுதிகளிலும் 4 ஆண்கள் விடுதிகளிலும் 75 பெண்

பிள்ளைகளும், 72 ஆண் பிள்ளைகளும் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர். இவர்களை மேற்பார்வை செய்வதற்காக 12 மேற்பார்வையாளர்கள் உள்ளனர்.

### கல்விச் செயற்பாடுகள்

ஏனைய பாடசாலைகளைப் போலவே இங்கும் தமிழ், விஞ்ஞான, கணித மற்றும் இந்து, கிறிஸ்தவ சமய மன்றங்கள் உள்ளன.

விழிப்புலனற்ற மாணவர்கள் வலய மட்டத்தில் திருக்குறள் மனனம், கவிதை ஆகிய போட்டிகளில் கலந்துகொண்டதோடு, வலிகாமத்தில் நடைபெற்ற மாற்று வலுவுள்ளோருக்கான மாவட்ட மட்டப் போட்டியில் நடனப் போட்டிகள் இரண்டில் முதலாம் இடங்களையும், பேச்சுப் போட்டிகள் இரண்டில் இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

சாரணியர், சிறுதோழிகள், சாரணர், குருளைச் சாரணர் என நான்கு பிரிவுகளாக சாரணியச் செயற்பாடுகளும் கூட இங்கு நடைபெறுகின்றன.

“க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்காக விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது” என்று கூறினார் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன்.

4 விழிப்புலனற்ற மாணவர்கள் பரியோவான் கல்லூரியிலும், ஒரு மாணவி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் தரம் 12ல் கற்பதுடன், 7 மாணவர்கள் தரம்-13ல் கல்வி கற்பதாக மேலும் அவர் தகவல் தந்தார்.

### விளையாட்டு

விளையாட்டிலும் இவர்கள் சளைத்தவர்களல்ல. யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்துக்கான 20-20 துடுப்பாட்டப் போட்டியில் இப் பாடசாலை மாணவன் த.கயல்ராஜ் சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.

சென்ஜோன்ஸ் கல்லூரி இன்ரறக்ட் கழகத்துடன் நடைபெற்ற சினேகபூர்வ உதைபந்தாட்டத்தில் இவர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

இவைதவிர, தடைதாண்டல், வலைப்பந்தாட்டம், நீளம் பாய்தல், 200 மீற்றர் ஓட்டம், அஞ்சல் ஓட்டம் ஆகியவற்றில் வலயமட்ட, மாவட்டமட்டப் போட்டிகளிலும் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான துடுப்பாட்டப் பயிற்சி வாரத்தில் மூன்று நாட்கள் வி.கே.சண்முகலிங்கம் என்பவரால் வழங்கப்பட்டு வருகின்றது.

“எங்கட எல்லா முன்னேற்றத்துக்கும் ஆசிரியர்களும் எங்கள் அதிபரும்தான் காரணம். எங்களை அம்மா, அப்பா போல அரவணைப்பது அவர்கள்தான்” என்று மாணவர்கள் நன்றியுடன் கூறுகின்றனர்.

அண்மையில் இங்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், பரதநாட்டியம், கராத்தே, நாடகம், மேற்கத்தேய நடனம், பாடல்கள், பாண்ட் வாத்தியம் இசைத்தல் என பல கலைகளையும் செய்து காட்டிக் கலக்கியுள்ளனர்.

### தொழிற்கல்வி

இந்தப் பிள்ளைகள் பாடசாலையைவிட்டு வெளியேறும்போது ஏதாவது ஒரு தொழில் செய்து உழைக்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதற்காக, மாலை நேர வகுப்புக்களாக கணினி, தட்டச்சு, தையல், விவசாயம் போன்ற தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஓட்டுவேலை, தச்சுவேலை, பன்னவேலை, சிகை அலங்காரப் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அதிபர் மகேந்திரன் கூறினார்.

“பல்கலைக்கழகத்தில் படித்த, படிக்கின்ற பலபேருக்கு எழுத்தறிவித்தது இந்த ந..வீல்ட் பாடசாலைதான்” என்று பெருமைப்பட்டார், வாணிவிழாவுக்காக அங்கு வந்திருந்த பாடசாலையின் பழைய மாணவனும், தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கல்வி படித்துவரும் விழிப்புலனற்ற மாணவர் கே.சுதாகர்.

### நிதியுதவி

இந்த மாணவர்களுக்கான உணவு, உடைகள், கற்றல் உபகரணங்கள், மேலதிக ஆசிரியர்கள், சிற்றூழியர்களுக்கான வேதனம் என்று பல செலவுகளை நிர்வாக சபையே வழங்குகின்றது.

இந்தச் செலவீனங்களைச் சமாளிப்பதற்கென நிதி சேகரிப்புத் திட்டமொன்றை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள கூப்பன் அட்டைகள் மூலம் இந்த நிதியுதவி கோரப்பட்டுள்ளது. 50 ரூபா பெறுமதியான புள்ளிகளை வாங்குவதன் மூலம் இந்த நிதி சேகரிப்புக்கு யாரும் கைகொடுக்கலாம்.

**– செ.கார்த்திகா**

# மொழியோடு

## முயற்சி

முயற்சி செய்தால்
முடியாதது இல்லை
வெற்றிக்குத் தேவை
முயற்சி, உழைப்பு
முயற்சிகள் தவறலாம்
முயற்சிசெய்யத் தவறலாமா?
இன்று எம்மால் முடியாது என்பது
இன்னொருவரால் எங்கோ
இலகுவாக செய்யப்பட்டுக்கொண்டிருக்கும்.
முடியும்வரை முயன்று பார்.



## காதல்

தாய்மையின் குழைவும்
தந்தையின் பரிவும்
பொறுப்புள்ள புன்னகையும்
பூமியின் பொறுமையும்
துணை வாட தான் வாடும்
ஒருயிர் உணர்வும்- எங்கே
தோன்றுகின்றதோ- அங்கே
வாழ்வதுதான் காதல்

## நட்பு

உயிரோடு இருக்க ஒரு பிறவி போதும்
உன் நட்போடு வாழ பல ஜென்மம் வேண்டும்
பிரிவை யாராலும் மறக்க முடியாத வலி
நினைவுகளை யாராலும் திருடமுடியாத பரிசு
அழகா இருந்தால் வருவேன் என்றது காதல்....
பணம் இருந்தால் வருவேன் என்றது சொந்தம்....
எதுவும் வேண்டாம்
நான் இருக்கிறேன் என்றது நட்பு

## வரம் கொடுப்பது யார்?

பிள்ளைவரம் வேண்டி கோயில்களைச்
சுற்றிவரும் பெண்களுக்குத் தெரிவதில்லை
அநாதை இல்லத்தில் அம்மா வரம் வேண்டி
காத்திருக்கும் குழந்தைகளை...



## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஒரு புத்தகம் - அதில்
ஒரு பக்கம் மட்டும் வாழ்க்கையல்ல
ஒவ்வொரு பக்கங்களானதே வாழ்க்கை

உன் பேனாவைக் கூட மூடிவைக்காதே
அதை திறக்கும் வினாடிகளில் கூட - நீ
எழுத நினைத்ததை மறந்து விடக் கூடும்
நடந்ததை ஆயிரம் முறை யோசிப்பதை விட
நடக்கப் போவதை ஒரு முறை யோசி -நீ
வாழ்க்கையில் முன்னேறுவாய்

## ஏழையின் வறுமை

ஏழையின் வறுமை
ஏழையின் வயிற்றிற்குத் தெரிவதில்லை....
வயிறுள்ள சில மனிதர்களுக்கு
ஏழையின் வறுமை புரிவதில்லை....

## மடியில் உறங்கும் வெண்ணிலவே

ஏழை வீட்டில் பிறந்தாலென்ன?
என் செல்லமே
உன் தாய் மடிதான் ஊஞ்சல்
உனக்கு நான்தான் தாலாட்டு
உன் பிஞ்சுக் கரங்களில் நானும்
என் அன்புப் பிடியில் நீயும்
ஆசை ஆசையாய் ஆனந்தமாய்
நித்தமும் உண்போம் நிலாச்சோறு!

கண்ணீருக்கும் கவலைக்கும் இடமில்லாமல்
கண்ணாமூச்சி ஆடிடலாம் சந்தோசமாய்!
கண்ணீரோடு பிரார்த்தனை செய்வேன்
கண்மணியே உனக்காக
அவ்வப்போது ஒருநாள் மட்டும்
சண்டையிட்டுக் கோபித்துக்கொள்வேன்
உன்னோடு!

பின்னொரு நாளில்
சாவின் மடியில் நான்
சாய்ந்திருக்கும் வேளை
சந்தோசமாய் உன் முகம் பார்த்து
சாந்தமாய் கண்மூடிப்போவேன்!

# விளையாடு

**வாசகர்களே!**
**நீங்களும் உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு**
**எழுதியனுப்பலாம்**
**தரம் கண்டு பிரசுரிக்கப்படும்**

போருக்குப் பிந்திய சூழலில் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்டுவரும் எந்தவொரு அபிவிருத்தியை விடவும், விளையாட்டுத்துறையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சி முன்னிலை வகிக்கிறது. விளையாட்டுக் கழகங்கள், பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகம் வரையில் அண்மைக் காலத்தில்

விளையாட்டுத்துறையினர் தமது வெற்றிகளுக்கு மகுடம் சூட்டியுள்ளனர்.

விளையாட்டுக்கு ஏற்ற சூழல் விளையாட்டுத்துறையினருக்கு ஏற்ற நாடாக இலங்கை இப்போது மாறியுள்ளது என்று, யாழ் பல்கலைக்கழக விளையாட்டுத்துறையின்

அரங்கில் பிரகாசிக்கக்கூடியதாக மாறுவார்கள்'' என்று அவர் உறுதிபடத் தெரிவித்தார்

**2010 சாதனை**

2010ம் ஆண்டுக்கான, 10வது இலங்கை பல்கலைக்கழகங்களு க்கிடையிலான மினி ஒலிம்பிக் போட்டியில் யாழ் பல்கலைக்கழக

# வடமாகாண விளையாட்டுத்துறை நட்சத்திரமாக

# யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத்துறை

ஆண்கள் பிரிவு 71 புள்ளிகளுடன் முதலாம் இடத்தைப் பெற்று, சாதனை படைத்தது.

இந்தப் போட்டியில் ஆண்கள், பெண்கள் பெற்ற மொத்தப் புள்ளிகவின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகம் 6 தங்கம், 6 வெள்ளி மற்றும் 9 வெண்கலப் பதக்கங்களுடன், 105 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

எட்டப்பட்டிருக்கும் சாதனைகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

இதில், யாழ் பல்கலைக்கழக விளையாட்டுத்துறையினர் பெற்றிருக்கும் அடைவுகள் குறிப்பிடத் தகுந்தவையாக உள்ளன. கல்வி நடவடிக்கைகளுக்கு மேலாக விளையாட்டுத்துறையிலும் தம்மால் ஜொலிக்க முடியும் என்பதை யாழ் பல்கலைக்கழக விளையாட்டுத்துறையினர் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

யாழ் மாவட்ட விளையாட்டு அணிகள் அனைவருக்குள்ளும் முதன்மையான இடத்தைப் பெற்றிருப்பதன் மூலம், யாழ் பல்கலைக்கழக

தற்போதைய முன்னேற்றம் பற்றிக் கூறும்போது, யாழ் பல்கலைக்கழக கூடைப்பந்து பயிற்றுநர் திருமதி. ய.சரவணபவ ஐயர் தெரிவித்தார்.

“பிற மாவட்டங்களிலுள்ள விளையாட்டு அணிகள் இங்கு வருகை தருவதுடன், எமது அணிகள் வெளி இடங்களுக்கு இலகுவாக, பயமின்றிச் செல்லக்கூடிய சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளமை யாழ் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணம்'' என்கிறார் அவர்.

“இதனை எமது வடமாகாண சகல விளையாட்டு அமைப்புக்களும் பயன்படுத்துவோமாக இருந்தால், எமது வீரர்கள் உலக விளையாட்டு

இதில் கூடைப்பந்தாட்டப் பெண்கள் பிரிவு மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. மற்றும் கராத்தே போட்டியில் ரி.ஜெயதர்சன், வி.நவநீதன், க.நிருபன், எஸ்.கஜேந்திரன் ஆகியோரும், பழுதூக்கும் போட்டியில் எஸ்.பிரசாத், எஸ். சிவசொரூபன் ஆகியோரும் பதக்கங்களை வென்றனர்.

ஆண்கள் அணியின் முகாமையாளர் திரு. க.கணேசநாதன், பெண்கள் அணியின் முகாமையாளர் திரு.கோ.டா.மதியழகன், பயிற்றுநர் செல்வி. இ.அருளம்பலம், தடகள ஆண்கள் அணியின் தலைவர் சி.கோபிநாத், பெண்கள் அணியின் தலைவர் க.மயூரி ஆகியோர் எடுத்துக்கொண்ட அயராத

## வரலாற்றுத் தடங்களில் சாதனைகள்

1993 ஆவணியில், அமெரிக்காவின், நியூயோர்க் பவிளோர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலகப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில், விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர் ற.சோதிலிங்கம் 100 மீற்றர், 200 மீற்றர் குறுந்தூர ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டார். பயிற்றுநர்.ற.ராஜசிங்கம்.

1998 இல் நடைபெற்ற இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில், யாழ்.பல்கலைக்கழக வீராங்கனை ச. சிவராணி,100, 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் முதலாம் இடம் பெற்றார். பயிற்றுநர்: திரு. அருளம்பலம்.

2003 இல் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டியில், யாழ். பல்கலைக்கழக வீரரான ச.ரஞ்சித்குமார், தடைதாண்டல், நீளம் பாய்தல், கோலூன்றிப் பாய்தல் ஆகிய மூன்று விளையாட்டு நிகழ்விலும் சாதனை படைத்தார்.

**தடைதாண்டல் – 15.6 செக்கன்**

**நீளம் பாய்தல் – 6.9 மீற்றர்**

**கோலூன்றிப் பாய்தல் – 3.35 மீற்றர்**

இதே ஆண்டில், யாழ். பல்கலைக்கழக மாணவியான ரி.வாசுகி 400 மீற்றர் தடைதாண்டல் 1.15.1 செக்கனில் ஓடி முடித்து சாதனை படைத்தார்.

2003 இல் தென் கொரியாவில் நடைபெற்ற உலக பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில், ச.ரஞ்சித்குமார் தடைதாண்டல் மற்றும் அஞ்சல் ஓட்ட நிகழ்விலும், ச.துசியந்தன் 100 மீற்றர் மற்றும் அஞ்சல் ஓட்ட நிகழ்விலும் பங்குபற்றினர்.

2003 இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆண்கள் பிரிவு, 2008 வரையில் இந்த இடத்தைத் தக்கவைத்தது.

2009 இல், இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டியில் ஆண்கள் அணி முதலாம் இடத்தைப் பெற்றது. ஆண்கள் குழு 7 முதலாம் இடங்களும், 8 இரண்டாம் இடங்களும் மற்றும் அஞ்சல் ஓட்ட குழு நிகழ்வில் முதலாம் இடமும் பெற்றது.

கூடைப்பந்தாட்டத்தில் 4ஆம் இடத்தையும், உதைபந்தாட்டத்தில் முதலாம் இடத்தையும், நிறை தூக்குதலில் 4ஆவது இடத்தையும் பல்கலைக்கழக அணி பெற்றது.

முயற்சிகளுக்கும், மாணவர்களின் உழைப்புக்கும் கிடைத்த வெற்றியாக இவை அமைந்தன.

ஆண்கள் பிரிவில் சி.கோபிநாத், க.ஜங்கரன், செ.வினோதன், இ.ஜெயரூபன், அ.ஸ்ரீநிவாஸ், கு.துசிகரன், ந.கஜேந்திரன் ஆகியோரும், பெண்கள் பிரிவில் சி.யாழினி, சி.துசித்தா, இ.மேரிதர்சினி ஆகியோரும் அதிகம் பிரகாசித்தனர்.

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானமும், விளையாட்டு உபகரணங்களும், பயிற்றுவிப்பாளர்களும் வட மாகாணத்தின் விளையாட்டுத்துறை வளர்ச்சியை பொறுத்தவரைக்கும் முன்னணியில் உள்ளன.

அத்தடன் ஒவ்வொரு விளையாட்டுத்துறை சார்ந்த வீரர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கென தனித்தனி பயிற்றுநர்கள் இங்கு உள்ளனர்.

வடமாகாணத்தில் அண்மைக் காலங்களில் அறிமுகமாகிய விளையாட்டுக்கள் அனைத்திற்கும் உடனுக்குடன் பயிற்றுநர்களை நியமித்து, வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கிவருகின்ற யாழ். பல்கலைக்கழக நிர்வாகம், இவ் விளையாட்டுக்கள் பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கு அறிமுகம் செய்யப்படவேண்டும் என்ற பரந்த நோக்கோடு செயற்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது.

**-ம.சுஜீவன்**

பண்டமாற்று முறையிலிருந்து தகரப் பணம் தோன்றி, நாணயம், தாள் காசு, காசோலை, கடன் அட்டை என வளர்ந்து, இன்று இணையத்தினூடாக இலத்திரனியல் பணம் (e-money) வரையில் பல அவதாரமெடுத்துவிட்டது பணம்.

இதைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்துவிட்டால், அது நமக்காக வேலை செய்து நமது வாழ்க்கையை வளமாக்கும். இதற்கு வங்கிகள் கூட நமக்குக் கைகொடுக்கும்.

# வரம் தரும் வங்கிகள்

பொதுவாக வங்கிகள், பணவைப்பு(Deposit), மீளளிப்பு(Withdrawal) , காசோலை(Cheque), மேலதிக பற்று(Over draft) மற்றும் கடன்(Loan) சேவைகளை வழங்குகின்றன. இவற்றைவிடவும், வெளிநாட்டு நாணயக் கணக்கு(RFC-Resident Foreign Currency Account), பாதுகாப்புப் பெட்டகம்(Locker), தங்க நகை அடவு(Pawning), ATM அட்டை, கடனட்டை(Credit Cards), நாணய மாற்றம்(Money exchange) என்று, வங்கிச் செயற்பாடுகள் இன்னும் விரிவடைந்து செல்கின்றன.

இவைபற்றிய சரியான அறிவு இருந்தால், வங்கிகளைச் சரியாகப் பயன்படுத்தி எமது நிதி வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ளலாம்.

## பணத்திலிருந்து பணம் சம்பாதிக்கலாமா?

### சேமிப்புக் கணக்கு (Savings Account):

பணத்தைச் சேமித்து, வட்டி இலாபத்தை உழைக்க இது உதவுகிறது. பொதுவான சேமிப்புக் கணக்குகள் தவிர, சிறியோர், பெண்கள், முதியோர், இளம்பராயத்தினர் என்று ஒவ்வொரு விதமானவர்களுக்குமென விசேட சேமிப்புக் கணக்கு வசதிகளையும் வங்கிகள் வழங்குகின்றன. இவற்றில் பொருத்தமானதை, கூடுதல் வட்டி வீதத்தை வழங்கும் கணக்குகளை ஆரம்பித்து இலாபமீட்ட முடியும்.

சேமிப்புக் கணக்குகளுக்கு லொத்தர் பரிசுகள், வைப்புக்கு எதிரான கடன் வசதி என மேலதிக நன்மைகளும் வாடிக்கையாளரைக் கவர்வதற்காக வழங்கப்படுகின்றன.

### நடைமுறைக் கணக்கு (Current Account):

காசோலை வியாபாரம் மற்றும் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு உகந்த இந்தக் கணக்குக்கு வட்டி இலாபம் வழங்கப்படுவதில்லை. ஆனால், காசோலைகளாக(Cheque) பணத்தைக் கையாளும் வசதி கிடைக்கும். பண வரவு முழுவதையும் இந்தக் கணக்கில் வைப்பிலிட்டு காசோலைகளூடாகக் கொடுக்கல் வாங்கல்களைக் கிரமமாகக் கையாண்டு வந்தால், எதிர்காலத்தில் பல நன்மைகளையும், வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

### திகதியிட்ட காசோலை

வியாபாரத் தேவைகளுக்கு பொருள் கொள்வனவு செய்யும்போது,உடனடியாக பணம் வழங்காமல், பிந்திய ஒரு திகதியை இட்டு காசோலையாகக் கொடுத்து (Dated Cheque), இல்லாத முதலில் வியாபாரம் செய்ய இந்தக் கணக்கு உதவும். குறித்த திகதிக்கு முன்னர், விற்பனை வருமானத்தில் உரிய பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு, கொள்வனவுக்காகக் கொடுத்த காசோலைக்குரிய பணத்தை ஈடுசெய்துவிடலாம்.

### மேலதிகப் பற்று

கிரமமாக இந்தக் கணக்கில் பணத்தைப் பேணிக் கையாண்டு நல்ல கணக்கு வரலாற்றைக் கொண்டிருந்தால் (Account History), அவசர செலவீனங்களுக்கு வங்கியில் பணம் இல்லாமலே காசோலை மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான மேலதிகப் பற்று(Over draft) வசதியை வங்கி வழங்கும். இதற்கு குறிப்பிட்டளவு வட்டி வங்கியால் அறவிடப்பட்டாலும், அவசர தேவைகளுக்கு உதவும் உற்ற நண்பன் இது.

வியாபாரிகள் மட்டுமன்றி, எவருமே நடைமுறைக் கணக்கொன்றைப் பேணி, அதில் தமது

வருமானம் முழுவதையும் வைப்பிலிட்டு காசோலைகள் மூலம் பணத்தைக் கையாண்டு வந்தால் அதிகளவு நன்மைகளைப் பெற முடியும். மாதாந்தச் செலவினங்களான தொலைபேசி, மின்சாரக் கட்டணங்களை காசோலை மூலம் இலகுவாகச் செலுத்திவிடலாம். சிறந்த கணக்கு வரலாற்றைப் பேணுவதன் மூலம், வியாபாரிகள் அல்லாதவர்களும்கூட மேலதிகப் பற்று வசதி உள்ளிட்ட பல்வேறு நன்மைகளை அனுபவிக்க முடியும்.

## வட்டி குட்டி போடுமா?

### நிலையான வைப்பு (Fixed Deposit):

நீண்ட காலத் தவணையில் பணத்தை வைப்பிலிட்டு, உயர் வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வசதியை இந்தக் கணக்கு வழங்குகிறது. 1 – 3 - 6மாத வைப்புக்களாகவும், ஒன்று முதல் ஐந்து வருடங்களுக்கான தவணை வைப்புக்களாகவும் பணத்தைச் சேமித்து வட்டி இலாபமீட்ட இந்தக் கணக்கு உதவும்.

### வட்டிக்கு வட்டி

மாதா மாதம் வட்டி கணக்கிடப்பட்டு முதலுடன் சேர்க்கப்படும். தவணைக்காலம் முடிந்ததும் வட்டியுடன் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம். தவணைக்காலம் முடிந்த பின்னரும் பணத்தை அதே கணக்கில் பேணினால், வட்டிக்கு வட்டி கிடைக்கும்.

எனினும், காலத்துக்குக் காலம் வட்டி வீதங்கள் மாற்றப்பட்டு வருவதால், வங்கியாளரின் ஆலோசனையுடன் இந்தக் கணக்கையும், வைப்புக் காலத்தையும் தீர்மானிக்கவேண்டும்.

### வைப்புக்கு எதிரான கடன்

நிலையான வைப்பில் இட்ட பணத்தை தவணைக்காலம் முடியுமுன் நினைத்த நேரத்தில் மீளப் பெற முடியாது (அவ்வாறு பெற்றால் உரிய வட்டி கிடைக்காமல் போய்விடும்). ஆனால், நிலையான வைப்புக்கு எதிராக கடன் வசதியைப் பெற்றுப் பணத்தைச் செலவு செய்ய முடியும். இதனால், வைப்பிலிட்ட பணத்தைச் செலவுசெய்யாமல், அதற்குரிய வட்டி இலாபத்தைப் பெற்றவாறே, தேவையான பணத்தைச் செலவுசெய்யும் வசதி கிட்டுகிறது.

இந்தக் கடனுக்கு, நிலையான வைப்புக்கான வட்டி வீதத்தைவிட 1-3 சதவீதம் அதிகமான வட்டியே வங்கியால் அறவிடப்படும்(நிலையான வைப்புக்கு 9சதவீத வட்டி வழங்கப்பட்டால், கடனுக்கு 10 முதல் 12 சதவீத வட்டி அறவிடப்படும்) இது மிகக் குறைந்த வட்டியுடனான கடன் வசதியாக அமையும்.

**தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள சில வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்**

Bank of Ceylon
People's Bank
Commercial Bank
Hatton National Bank
National Savings Bank
Seylan Bank
HSBC
Nation Development Bank(NDB)
Nation Trust Bank(NTB)
Union Bank
Sampath Bank
DFCC Bank
LOLC
LB Finance
Pan Asia

### அழைப்பு வைப்பு (Call Deposit):

இது, முதலீட்டாளர்களின் உடனடி வைப்புச் செயற்பாடுகளுக்கான மிகக் குறுகிய காலத் தவணையில் பணத்தை வைப்பிலிடும் கணக்காகும். எந்த நேரத்திலும் பணத்தை வைப்பிலிடவும் - மீளவும் பெறவும் முடியும். ஆகக்கூடியது 7 நாட்களுக்கு நாம் பணத்தை வைப்பிலிட முடியும்.

இதற்கு கவர்ச்சியான வட்டி வீதம் வழங்கப்படுகிறது. எனினும், தவணைத் திகதிக்குள் பணத்தை மீளப்பெறாவிட்டால் அது குறைக்கப்பட்டுவிடும். இந்தக் கணக்கில் அதிகளவு பணத்தை வைப்பிலிட்டால் (மில்லியன்கள்) விசேட சலுகைகளும் கிட்டும்.

மேற்கண்ட கணக்குகளில், எமக்குப் பொருத்தமான, உயர் வருமானத்தை அல்லது நன்மைகளைத் தரக்கூடிய கணக்கைத் தேர்ந்தெடுத்து, எமது வருமானத்தை முழுவதுமாக வங்கியில் வைப்பிலிட்டு கையாண்டு வந்தால் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இவைபற்றி அடுத்து வரும் இதழ்களில் மேலும் பார்ப்போம்.

வங்கிப் பழக்கம் இருந்தால், பங்கம் இராது வாழ்வில்.

**– ஆ.சிந்துஜா**

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனம் ஓட்ட முடியாது என்ற நிலைமை இப்போது இங்கே உருவாகிவிட்டது. அது மட்டுமன்றி, வாகனப் பதிவு, காப்புறுதி, தலைக்கவசம், வீதி விதிமுறைகள் எல்லாம் நடைமுறைக்கு வந்துவிட்டன.

தற்போதைய நிலையில் 49CC க்குட்பட்ட மோட்டார் சைக்கிள்கள் தவிர, எந்த வாகனம் ஓட்டுவதனாலும் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம். மோட்டார் சைக்கிள், கார், வான் என்பவற்றை இலகு வாகனங்கள் (Light Vehicles) எனவும், பேரூந்துகள், பார ஊர்திகள் போன்றவற்றை Heavy Vehicles எனவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வகைப்படுத்தி தனித்தனியே சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குகிறது. முச்சக்கரவண்டிகளுக்கு பிரத்தியே அனுமதிப்பத்திரம் தேவை.

இலகு வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். பார ஊர்திகள் உள்ளிட்ட Heavy Vehiclesக்கு 21 வயது பூர்த்தியாகி இருப்பதுடன், இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கவும் வேண்டும்.

தற்போதைய நடைமுறையின்படி, Online மற்றும் Offline என இரண்டு வழிமுறைகளில் அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பிக்க முடியும். Online முறையில் கொழும்பு வேரஹேர காரியாலயத்துக்கு நேரடியாகச் சென்று உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து சாரதி அனுமதிப்பத்திரத்தை அன்றைய தினமே பெற்றுக்கொள்ளலாம்.

Offlineமுறையில் ஒவ்வொரு மாவட்டங்களிலுமுள்ள கச்சேரிகளில் அமைந்திருக்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள காரியாலயத்தின் ஊடாக அனுமதிப்பத்திரத்தைப் பெறலாம். வாகனம் செலுத்தப் பழக்கும் லேணர்ஸ் உம் இதற்கான ஒழுங்குகளைச் செய்து தருவர்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களும் வழிமுறைகளும்**

யாழ் மாவட்டச் செயலகத்திலுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்தில் விண்ணப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி, தேசிய அடையாள அட்டையின் ∴ போட்டோ பிரதி, பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதி மற்றும் உறுதிப்படுத்தப் பட்ட ∴போட்டோ பிரதி, MBBS வைத்திய அதிகாரியால் உறுதிப்படுத்தப் பட்ட மருத்துவச் சான்றிதழ், புதிய பாஸ்போர்ட் அளவிலான மூன்று கறுப்பு வெள்ளைப் படங்கள் (பின்னணி Background வெள்ளை நிறமாக இருக்கவேண்டும் - ஒரு படம் மட்டும் வெள்ளைத் தாள் ஒன்றில் ஒட்டி கிராமசேவையாளரின் கையொப்பத்தைப் பெற்றிருக்க வேண்டும்) என்பற்றுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

மோட்டார் சைக்கிளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் மட்டுமாயின் 1700 ரூபாவும், கார், வான் போன்ற இலகுரக வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரத்துக்கு 2000 ரூபாவும், பார ஊர்திகளுக்கான அனுமதிப்பத்திரத்துக்கு 2250ரூபாவும் செலுத்தவேண்டும்.

அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்து பணம் செலுத்திய பின் எழுத்துமூலப் பரீட்சை நடைபெறும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்தால் மூன்று மாதங்கள் வாகனங்களை ஓட்டிப் பழகுவதற்கு L தகடுகள் வழங்கப்படும்.

இதைப் பெற்ற 92 நட்களுக்கு பின் செயல்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, அதில் தேர்ச்சி பெற்றால் உடனேயே தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

6 மாதங்களுக்குப் பின்னர் இலங்கை மோட்டார் திணைக்களத்தின் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

**– ஞா.கிரிசாந்**



# வாசகர் மனதில் 'சிகரம் தொடு'

சிகரம் ஊடக இல்ல மாணவர்களின் படைப்பான 'சிகரம் தொடு' சஞ்சிகையைப் பார்த்தேன். மாணவர்களின் படைப்பு, ஆக்கத்திறன் பாராட்டத்தக்கது. நீண்ட இடைவெளியின் பின் சஞ்சிகையாக வெளிவந்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. சிகரம் முதலாம் குழு மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு ஓர் வழிகாட்டியாக உள்ளனர்.

சஞ்சிகையின் இதழ் வடிவமைப்பு நன்றாக உள்ளது. எனினும், சில படங்கள் தெளிவற்று உள்ளன.

**கலாசாரம் சீரழிகிறதா?** – பெண்களை மட்டும் குற்றவாளிகளாகச் சுட்டிக்காட்டுவது ஏன் என்ற கேள்வி சரியானதே.

**ஆயிரம் வாசல்– பெருகிக்கிடக்கும் உயர்கல்வி வாய்ப்புக்கள்** - பெற்றோருக்கும் ஒரு பாடம்.

**வசந்தமான போக்குவரத்து வாய்க்குமா?**– போக்குவரத்து சேவையை வழங்குவோரின் கவனம் இங்கே திரும்பட்டும்.

**ஒளி இழக்கா விழிகள்**- திறமை உள்ளவர்களை உலகுக்கு வெளிக்காட்டவேண்டிய கடமை ஊடகவியலாளர்களுக்கே உரியது.

**பெயர் சொல்லும் வடை** – உள்ளூர் உற்பத்தியை வெளிப்படுத்தும் ஆரம்பக்கட்டம். வரவேற்கத்தக்கது.

**சட்டத்தை ஆள்வோம்**- சட்டங்கள் சமூகத்தை திருத்தும் நல்லதொரு முயற்சி.

**யாழ்ப்பாணம் மூழ்கி விடுமா?** – சூழலியல் சம்பந்தமாக மக்களை விழிப்புணர்வூட்டும் கருத்து.

உல்லாசபுரியாகுமா யாழ்ப்பாணம்? , Facebook இல் தவிர்க்க வேண்டியவை, கணினி சம்பந்தமான ஆக்கங்கள் மற்றும் ஆறாவது விரல் ஆக்கினை தருமா? என்பன மிகச்சிறந்த படைப்புக்களாகும். அத்துடன் விளையாட்டு, திருமறைக்கலாமன்றம் வழங்கும் வாய்ப்பு, அழகுக்குறிப்பு என்பனவும் சிறந்த ஆக்கங்களாகும்.

வெளிநாட்டு நிகழ்வுகள், அரசியல் ஆய்வு, வைத்திய ஆலோசனைகள், வீட்டு வைத்தியம், மூலிகைகளின் பயன்பாடு, சமய சிந்தனைகள், சினிமா கண்ணோட்டம், துஷ்பிரயோகங்களைத் தடுத்தல் (சிறுவர், பெண்கள்), விவசாயம், கால்நடை சம்பந்தமான விடயங்கள் மற்றும் கல்வி வழிகாட்டிகள் என்பவற்றையும் சேர்த்தால் இன்னும் நன்று.

இனி வெளிவரும் இதழ்கள் மிகச்சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்

**–க.கனக.மனோராசா (சுழிபுரம்)**

'சிகரம் தொடு' சஞ்சிகையின் ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பாக உள்ளன. **உல்லாசபுரியாகுமா யாழ்ப்பாணம்?, கலாசாரம் சீரழிகிறதா?, 'எங்கட நாடு உங்கட நாடு என்று ஒன்றில்லை', இளைஞர் நெஞ்சில் புயலைக் கிளப்பிய ஏ.ஆர்.ரகுமான்** போன்ற ஆக்கங்களை விரும்பி வாசித்தேன்.

மேலும், **நல்ல இரசிகனே மிகச்சிறந்த படைப்பாளியாக முடியும்** என்ற ஆக்கமும் சிறப்பாக உள்ளது.

தமிழ் ஆக்கங்களில் ஆங்கிலச் சொற்களின் பாவனையைக் குறைக்கலாம். மேலும், வரலாறு, இலக்கியம், விஞ்ஞானம், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகள் சம்பந்தமான ஆக்கங்களையும் சேர்க்க வேண்டுகிறேன்.

**K.மதுராகரன்**

உங்கள் வாழ்த்துக்களுக்கும், ஆலோசனைகளுக்கும் நன்றி. அவை எம்மை உற்சாகப்படுத்தி, மென்மேலும் சிறப்பாகப் பணியாற்ற ஊக்கப்படுத்துகின்றன.

தொடர்ந்தும் உங்கள் அபிப்பிராயங்கள், ஆலோசனைகள், ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

**'சிகரம் தொடு' ஆக்கக் குழுவினர்**

**வணிகச் சிகரம்**

# போட்டிகளை எதிர்கொண்டு வியாபாரத்தில் வெற்றிபெறுவோம்!

இன்றைய சூழலில் வியாபாரம் படுத்துவிட்டது என்று பலரும் குறைப்படுகிறார்கள். வெளியிலிருந்து வரும் வியாபாரிகளின் தெருவோரக் கடைகளாலும், வீட்டுக்கு வீடு அவர்கள் மேற்கொள்ளும் வியாபாரத்தாலும் நட்டம் ஏற்படுகிறது என்று கவலைப்படுகிறார்கள்.

"நெருக்கடியான நேரத்திலை சனங்களுக்குத் தேவையானதை நாங்கதான் றிஸ்க் எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தம். இப்ப அதுகள் எங்களை மறந்திட்டுதுகள்" என்று ஒரு வர்த்தகர் வெளிப்படையாகவே குறைப்பட்டுக்கொண்டார்.

ஆனால், உண்மை நிலை என்ன? மக்கள் யாரையும் மறக்கவில்லை. பொருள்கள் எங்கு மலிவாகவும், தரமாகவும் கிடைக்கிறதோ அங்குதான் அவர்கள் அவற்றை வாங்குவார்கள். அதுவே வீடு தேடி வருகிறது என்றால் விடுவார்களா?

போட்டி வியாபாரத்துக்கு நம்மைப் பழக்கப்படுத்திக்கொள்வதே இன்றைய இந்த வியாபார நெருக்கடியை வெற்றிகொள்ள இருக்கும் ஒரே வழி. இதற்கு, வழமையாக நாம் கடைப்பிடித்துவரும் வழிமுறைகளை விடுத்து, நவீன வியாபார வெற்றி வழி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

போட்டிச் சூழலில் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து, அவர்களைத் தொடர்ந்து நம்முடனே வைத்திருக்க உதவும் நிரூபிக்கப்பட்ட இந்த சூத்திரங்களை நாமும் முயன்று பார்த்தால் வெற்றி நிச்சயம்.

**1. காட்சிப்படுத்தல்**

எந்தப் பொருளையும் விற்பனை செய்வதற்கு அதனை அழகாகக் காட்சிப்படுத்துவது அவசியமாகும். கடையில் பொருள்களை நெருக்கமாக, ஒன்றையொன்று மறைத்து றாக்கைகளில் அடுக்கி வைத்தால், வாடிக்கையாளர்களுக்கு உங்களிடம் இருக்கும் பொருள்கள் எப்படித் தெரியும்?

சுப்பர் மார்க்கற் வெற்றியின் மந்திரமே இதுதான். தம்மிடமிருக்கும் ஒவ்வொரு சிறிய பொருளையும் அழகாக றாக்கைகளில் அடுக்கி வைத்துவிடுகிறார்கள். ஏதோ ஒரு பொருள் வாங்க வந்தவர், றாக்கைகளிலுள்ள இன்னும் பல பொருள்களையும் பார்த்துக் கவரப்பட்டு, அவற்றையும் வாங்கிச் செல்வார்.

இது உலகறிந்த வெற்றிச் சூத்திரம்.

**2. வாடிக்கையாளர் சேவை**

வாடிக்கையாளர்கள்தான் எமது சொத்து. அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, நேரம் தாழ்த்தாமல், அவர்கள் கேட்கும் பொருள்களை உடனடியாக வழங்கவேண்டும்.

ஒருவேளை அவர்கள் கேட்கும் ஒரு பொருள் உங்களிடம் இல்லாவிட்டால், வெறுமனே 'அது இல்லை' என்று முடித்துவிடாமல், அவர்கள் கேட்கும் பொருள் எங்கே கிடைக்கும் என்று

வழிகாட்டி உதவுங்கள். அல்லது, அந்தப் பொருள் உங்களுடைய சக வியாபாரியொருவரிடம் கிடைக்குமென்றால், உடனே உங்கள் உதவியாளரை அனுப்பி அதை வாங்கிக் கொடுங்கள்.

அதன்பின் பாருங்களேன். அந்த வாடிக்கையாளர் தமக்கு என்ன தேவையென்றாலும் உங்கள் கடையையே சுற்றிச் சுற்றி வரத் தொடங்கிவிடுவார்.

**3.தொடர்பாடல்**

வியாபார வெற்றிக்கு இது மிக அவசியமானது. நன்றாகச் சிரித்துப் பேசி உறவாடும் தன்மையுடைய வியாபாரிகள் வெற்றியடைவதற்குக் காரணமே இதுதான்.

வாடிக்கையாளர்களுடன் வெறுமனே வியாபாரத்துடன் தொடர்பான விடயங்களை மட்டும் பேசாமல், பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அவர்களுடன் அக்கறையுடன் கதையுங்கள். அப்போதுதான் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கையும், பற்றும் ஏற்படும்.

பிறகென்ன? அவர் இனி உங்கள் நிரந்தர வாடிக்கையாளர்தான்.

**4.வாய்மூல விளம்பரம்**

இது மிகவும் பலம் வாய்ந்த ஒன்று. உங்கள் வாடிக்கையாளர்களை

நீங்கள் மிக அதிகம் திருப்திப் - படுத்தும் போது, அவர்கள் தாமாகவே உங்கள் வியாபாரம் பற்றி நாலு பேருக்குச் சொல்லிப் புகழ்வார்கள். இது இன்னும் பல வாடிக்கையாளர்களை உங்களுக்குத் தேடித் தரும்.

ஞாபகமிருக்கட்டும்! வாடிக்கையாளர்களின் திருப்திதான் உங்கள் தாரக மந்திரமாக இருக்கவேண்டும். உங்கள் வியாபார வெற்றியின் மூலதனமே அவர்கள்தான்.

**5.எந்தக் கடையிலும் இல்லாத ஒன்று...**

எத்தனை கடைகள், வியாபாரிகள் உள்ளனர்? அத்தனை பேரையும் விட்டு -விட்டு ஏன் வாடிக்கையாளர்கள் உங்களிடம் வரவேண்டும்? இந்தக் கேள்வியை உங்களிடமே கேட்டுப் பாருங்கள்.

வேறெந்த வியாபாரிகளிடமும் இல்லாத, எவரிடமும் கிடைக்காத, ஆனால், வாடிக்கையாளர்களுக்கு மிகவும் அவசியமான ஏதோ ஒன்று உங்களிடம் இருக்கவேண்டும்.

அதுதான் வாடிக்கையாளர்களை உங்களைத் தேடிவரச் செய்யும்.

அடிக்கடி இந்தக் கேள்வியை உங்களிடமே கேட்டு, புதிது புதிதாக தனித்துவமான எதையாவது வழங்குங்கள்.

உங்கள் கடையில் கூட்டம் கூடிவிடும்.



**6.போட்டியை – போட்டியாளரை தெரிந்துகொள்ளுங்கள்**

உங்களுக்கு இருக்கும் போட்டி என்ன, போட்டியாளர்கள் யார் என்பதைச் சரியாக இனங்காணுங்கள். அவர்களுடன் போட்டி போடும் வகையில் வாடிக்கையாளரை ஈர்க்க நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைத் திட்டமிட்டுச் செய்யுங்கள்.

உதாரணமாக, வெளியிலிருந்து வரும் வியாபாரிகள் உங்கள் போட்டியாளர்கள் என்றால், அவர்களை வெல்லக்கூடிய புதிய உத்திகளைக் கண்டுபிடியுங்கள்.

என்ன இருந்தாலும், நீங்கள் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். வெளியிலிருந்து வருவோரைவிட, இந்தப் பிரதேச மக்கள், அவர்களுடைய தேவைகள், எதிர்பார்ப்புக்கள் எவை என்பது உங்களுக்குத்தான் அதிகம் தெரியும். அதைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிபெறுங்கள்.

**7. சிறிய இலாபம் அதிக விற்பனை**

போர்க்காலத்தில் ஒரு பொருளை கொழும்பிலிருந்து கொண்டு வந்து சேர்க்க உங்களுக்கு அதிக செலவாகியிருக்கும். இதைவிட, அதிகளவு ரிஸ்கையும் நீங்கள் சந்தித்திருப்பீர்கள். எனவே, ஒரு பொருளில் உங்கள் இலாப வீதத்தை அதிகமாக வைக்கவேண்டிய தேவை உங்களுக்கு இருந்தது.

ஆனால், இப்போது நிலைமை அப்படியில்லை. பொருள்கள் இலகுவாக வந்து சேர்கின்றன. எனவே, சிறிய ஒரு இலாப வீதத்தை வைத்து, முன்னரைவிட அதிகளவு பொருள்களை விற்க முனையுங்கள்.

வாடிக்கையாளர்களின் கொள்வனவு ஆற்றலும், விருப்பமும் இப்போது மிகவும் அதிகரித்திருப்பதால், குறைந்த விலையில் அதிகளவு பொருள்களை விற்று, முன்னரைவிட இப்போது அதிக இலாபமீட்ட முடியும்.

**8. விளம்பரம்**

வியாபாரத்துக்கு விளம்பரம் முக்கியம். ஆனால், அதைத் திட்டமிட்டுச் சரியாகச் செய்யவேண்டும். உங்களது இலக்கு வாடிக்கையாளர்கள் யார் என்பதைச் சரியாக இனங்கண்டு, அவர்களைச் சென்றடையக்கூடிய ஊடகங்களில், வழிவகைகளில் விளம்பரம் செய்யவேண்டும்.

அப்போதுதான் விளம்பரத்துக்குச் செலவு செய்யும் பணம் உங்களுக்கு அதிக பயனை ஈட்டித் தரும்.

**– கோ. ருஷாங்கன்**

## வாசகர் கருத்து

வாசித்து முடித்துவிட்டீர்களா?

'சிகரம் தொடு' இளையோர் மாதாந்த சஞ்சிகை தொடர்ந்து உங்களுக்கு மென்மேலும் பயனளிக்கும் விதத்தில் அமைவதற்காக ஒரு நிமிடம் செலவிடுங்கள்.

நீங்கள் வாசித்து முடித்தவற்றில், உங்களுக்கு மிகவும் பிரயோசனமாக அமைந்த விடயங்கள் எவை?

ஏன் அவை உங்களுக்குப் பிரயோசனமாக அமைந்தன?

இன்னும் என்னென்ன விடயங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

என்பவற்றைச் சுருக்கமாக எமக்கு எழுதியனுப்புங்கள்.

**சிகரம் ஊடக இல்லம், இல. 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். SMS: 077 77 33 931**

தெரிவுசெய்யப்படும் *3* அதிர்ஷ்டசாலிகளுக்கு **3 மாத** சஞ்சிகை இலவசம்!

## சந்தா விண்ணப்பப் படிவம்

'சிகரம் தொடு' இளையோர் மாதாந்த சஞ்சிகையைத் தொடர்ந்தும் உங்கள் வாசலிலேயே பெற்றுக் கொள்வதற்கு அதன் சந்தாதாரர் ஆகிவிடுங்கள்.

1. பெயர் ........................................................
2. தொழில் ........................................................
3. முகவரி ........................................................
4. தொ.பே ........................................................
5. மின்னஞ்சல் ........................................................

இந்தப் படிவத்துடன் 'சிகரம் தொடு' இளையோர் மாதாந்த சஞ்சிகைக்கான சந்தாக் கட்டணம் 600 ரூபாவை (தபால் செலவு உட்பட), 'சிகரம் ஊடக இலலம்' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலையாக அல்லது யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்தில் மாற்றத்தக்க காசுக்கட்டளையாக அனுப்பி வையுங்கள்.

**"வாசகர்களின் ஆதரவுப் பலத்திலேயே ஊடகமொன்று வெற்றி பெறுகிறது"**

**சிகரம் ஊடக இல்லம்**
**இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

# 25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகத்துறை கற்கைநெறிகள்

பத்திரிகை – வானொலி – தொலைக்காட்சி – இணையம்
அச்சகம் – ஸ்ரூடியோ – ஃபோட்டோ – வீடியோ – அறிவிப்பாளர்
விற்பனை, ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல், விளம்பரத்துறை
என்னும் பல அரச – தனியார்துறை தொழில்வாய்ப்புக்கள்

**யாழில் முதல் முறையாக**

## IT ORIENTED JOURNALISM

தொடர்பாடல் திறன்கள்,
செய்தி சேகரிப்பு, எழுதுதல்
விவரணக் கட்டுரையாக்கம்
அடிப்படை கணினி - இணையப் பயிற்சி

## NEWSPAPER LAYOUT

பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள்
பக்க வடிவமைப்பு
வரைகலை (Graphic) அடிப்படைகள்
Word, PageMaker, Photoshop

## PROFESSIONAL PHOTOGRAPHY

ஒளிப்படக்கலை அடிப்படைகள்
கலைத்துவ படப்பிடிப்பு நுட்பங்கள்
SLR, Digital Camera Techniques
Photo Editing
Studio Lab Training & More...

## CREATIVE GRAPHIC DESIGNING

வாழ்த்து மடல், அழைப்பிதழ்
விளம்பர வடிவமைப்பு, பதாகைகள்
Photo Editing, Album Desinging
Broachers, Banners & Hoardings
Coral Draw, Photoshop, Indesign

## RADIO JOURNALISM

வானொலி ஊடகவியல் அடிப்படைகள்,
அறிவிப்புக்கலை,
வானொலி எழுத்துருவாக்கம்,
நிகழ்ச்சித் தயாரிப்பு,
ஒலித்தொகுப்பு (Audio Editing)

## TV JOURNALISM

தொலைக்காட்சி ஊடக அடிப்படைகள்,
தொலைக்காட்சி அறிவிப்பு,
தொலைக்காட்சி எழுத்துருவாக்கம்,
வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு,
படத்தொகுப்பு (Video Editing)

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளன அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளரின் நெறிப்படுத்தலில்,
கொழும்பு - இந்திய - பிரித்தானிய ஊடக வல்லுநர்களின் வழிகாட்டலுடன்
முற்றிலும் செயன்முறைப் பயிற்சிகளுடன் நடைபெறும்

**நூலக வசதி - கணினி ஆய்வுகூடம்**
**Audio – Video Lab - Recording Studio**
**கலை, இலக்கிய நயம் - சினிமா, குறும்பட காட்சிகள்**

MEDIA

# சிகரம் ஊடக இல்லம்

இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931

Airtel
ஹலோ
யாழ்ப்பாணம்
உள்நாட்டு அழைப்புகளை விட
குறைந்த IDD கட்டணங்கள்
ரூ.1.99
கனடா
இந்தியா
அமெரிக்கா
ஐக்கிய இராஜ்ஜியம்
(நிலையான)
அவுஸ்திரேலியா
(நிலையான)
ரூ.3.00 (நிலையான இணைப்பு)
மலேசியா
சைப்பிரஸ்
சுவீடன்
ஜெர்மனி
பிரான்ஸ்
சுவிஸலாந்து
இத்தாலி
Rediffusion - Y&R